Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 181 | வியாழக்கிழமை 26 மே 2022 | வைகாசி 12 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50



"யாழ்ப்பாணத்தார் எல்லாரும் இப்ப தண்ணிக்கு பதில் பெற்றோலைத்தான் குடிக்கினம்போல. இல்லாட்டி ஏன் இவ்வளவு பெற்றோலை வாங்கோனும்..."

# உலக வங்கியின் கடன் இலங்கைக்கு இல்லை!

## முன்னர் அனுமதிக்கப்பட்டவையே மதிப்பாய்வு பொருளாதாரக் கொள்கையின் பின்னரே புதிய கடன்

கொழும்பு, மே 26

போதியளவு பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்தும்வரை, இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்குவதற்கான எந்தத்திட்டமும் இல்லை என்று உலக வங்கி கைவிரித்துள்ளது. 15 ➤

## 18 நாள்களில் 16 லட். லீற்றர்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 2ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 16 லட்சத்து 10 ஆயிரத்து 400 லீற்றர் ஒக்ரேன் 92 ரகப் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் 15 ➤

## எரிபொருள் பதுக்கல் 137 பேர் கைது

கொழும்பு, மே 26

எரிபொருளைப் பதுக்கிய குற்றச்சாட்டில் 137 பேர் நாடு முழுவதும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 429 சுற்றிவளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இந்தச் சுற்றிவளைப்புகளில் 27 ஆயிரம் லீற்றர் பெற்றோல் மற்றும் 22 ஆயி 15 ➤

## தீவக மீனவர்களுக்கு இந்திய ம.எண்ணெய்

யாழ்ப்பாணம், மே 26

இந்தியாவின் மானியமாக 15 ஆயிரத்து 750 லீற்றர் மண்ணெண்ணெய் யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்படவுள்ளது. அது தீவகத்தின் நயினாதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவைச் சேர்ந்த 705 மீனவர்களுக்கு தலா 20 லீற்றர் வீதம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. 15 ➤

## நெருக்கடி நிலைமையை சீராக்க மாவட்டச் செயலகம் நடவடிக்கை

### மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டை நீக்க முயற்சி வருமானம் குறைந்தோருக்கு விரைவில் உதவிப் பணம்



யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் மாவட்டச் செயலகத்தின் ஊடாகச் சிலநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் 15 ➤

## "காஞ்சனவின் உண்டியல்"

கொழும்பு, மே 26

ஒரு லீற்றர் பெற்றோலுக்கு இன்னமும் சுமார் ஒரு ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்த நிலையில், அநுராதபுரத்தில் சிலர் செய்த செயல் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

அநுராதபுரத்தைச்சேர்ந்த சிலர் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் ஒரு ரூபா நஷ்டத்தை ஈடு செய்வதற்கான திட்டமொன்றை 15 ➤

## பட்டும் திருந்தாத பெரமுன பஸிலைக் காக்க முயற்சி!

கொழும்பு, மே 26

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 21ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப் 15 ➤

## பெண் குரலில் உரையாடி ஆண்களிடம் பணம் பறிப்பு

### வட்டுக்கோட்டை இளைஞர் யாழ்.நகரில் கைது

கைபேசியில்செயலியை உபயோகித்து பெண் குரலில் பேசி ஏமாற்றி, ஆண்களிடம் பணம் பறித்த குற்றச்சாட்டில் 26 வயது இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் நகரப்பகுதியில்வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 15 ➤

## குடும்ப அட்டைக்கே இனிமேல் எரிவாயு!

### யாழ்ப்பாண மாவட்டச் செயலக கூட்டத்தில் நேற்று மாலை முடிவு

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாண மாவட்டத்தில் குடும்ப அட்டைக்கே எரிவாயுவை விநியோகிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை பிரதேச செயலர்களுடன் இடம்பெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக எரிவாயு 15 ➤

## அத்தியாவசியப் பணியாளரே இன்று முதல் அரச பணிக்கு!

### வெளியானது சுற்றறிக்கை

கொழும்பு, மே 26

அரச நிறுவனங்களுக்குப் பணியாளர்களை அழைப்பதில் வரையறைகள் விதிக்கப்பட்டு நேற்று சுற்றறிக்கை ஒன்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் வளப்பற்றாக்குறை காரணமாக அரச செலவினங்களைக் குறைக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கான சேவைகளைத் தொடர்ச்சி 15 ➤

## தமிழகத்தின் அரிசியில் யாழுக்கு 10 இலட்சம் கிலோ

### ஒரு இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும்

யாழ்ப்பாணம், மே 26

தமிழக அரசின் நன்கொடையில் முதல் கட்டத்தில் வழங்கப்பட்ட அரிசியில் 10 லட்சம் கிலோ அரிசி யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 7 ஆயிரத்து 500 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மதுசாரம், போதைப்பொருள் மக்களிடையே விழிப்புணர்வு

## யாழ். பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், மே 26

**மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தொடர்பிலான சமூக விழிப்புணர்வை உருவாக்குவது தொடர்பாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகர ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஒப்பந்தத்தின்படி, மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருள்கள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை ம்க்கள் மத்தியில் உருவாக்கும் செயற்பாடுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் இணைந்து கொள்வர். மதுசாரம், புகையிலை மற்றும் போதைப் பொருள்கள் பாவனையால் ஏற்பட்டு வரும் சமூகச் சிக்கல்கள் பற்றிய ஊடகங்கள் வழி விழிப்புணர்வுக்கான முன்னெடுப்புக்கள் மற்றும் அது தொடர்பான ஊடகப்படைப்புக்களை உருவாக்கும் பணிகளிலும் மாணவர்கள் ஈடுபடுவர்.

அத்துடன் மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருள்கள் பாவனைக்கு எதிரான கருப்பொருளைக் கொண்ட குறும்படப் போட்டியும், செயலமர்வுகளும் மாணவர்களுக்கு நடத்தப்படும்.

நிகழ்வில், கலைப்பீடப்பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி.ரகுராம், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் திருமதி அனுஷா சிவனேஸ்வரன், ஊடகக்கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் மதுசார மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஏ.சி. ரஹீம் மற்றும் ஏனைய அதிகாரிகள் கலந்துகொண்டனர். (க)



கோப்புப்படம்

# நிதியமைச்சராக ரணில் நியமனம்

கொழும்பு, மே 26

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சராக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றார்.

இதன்படி நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக அவர் நேற்று நண்பகல் தன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ம)

# மடிக்கணினி வழங்கும் நிகழ்வும் திறன் வகுப்பறைத் திறப்பு விழாவும்

சாவகச்சேரி, மே 26

வரணிப் பிரதேசத்தில் தரம் 5 புலமைப்பரிசில் ப்ரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்வும் இடைக்குறிச்சி சிறீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் திறன் வகுப்பறைத் திறப்பு விழாவும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது

வரணி ஒன்றிய ஐக்கிய இராச்சியம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-14,159)

# விடுமுறை தினத்தில் பாடசாலையில் திருட்டு

## ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 26

சுழிபுரம் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம் உடைக்கப்பட்டு ஒரு தொகைப் பணம் திருடப்பட்டுள்ளது என வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை விடுமுறை தினத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பொன்னாலை தெற்குப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-125)

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# தற்கொலைதாரிகளின் தந்தை பிணையில் விடுவிப்பு

கொழும்பு, மே 26

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு 3 வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரபல வர்த்தகர் மொஹமட் இப்ராஹிமும் அவரது மகனும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தகரின் இரு மகன்கள் உயிர்த்தஞாயிறு தினத்தன்று தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர்களாக அடையாளப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக பொலிஸார் தெமட்டகொடையிலுள்ள அவர்களது வீட்டுக்குச் சென்ற போது, தற்கொலைத் தாக்குதல் நடத்திய நபரொருவரின் மனைவி தனது பிள்ளைகளுடன் வெடிகுண்டை வெடிக்கச்செய்து இறந்தார். இதையடுத்தே மொஹமட் இப்ராஹிமும் அவரது மற்றொரு மகனும் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம)

# கசிப்புடன் ஒருவர் கைது

சாவகச்சேரி, மே 26



கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் கசிப்புடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதியை முற்றுகையிட்டபோது 20 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டு. இதனையடுத்து சந்தேகநபரைக் கைதுசெய்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,159)

# எரிபொருள் நிலையங்களுக்கு மீண்டும் இராணுவப் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், மே 26



எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மீண்டும் இராணுவப் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அண்மைக்காலமாக மோதல்களும் இன்னும் சில அசம்பாவிதங்களும் பதிவாகிய நிலையிலேயே அவற்றைத் தடுக்கும் வகையில் நாட்டில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் இராணுவப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

கடந்த மாதமும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்புப் போடப்பட்டு பின்னர் அது நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# எரிபொருள்களுக்கு சிறப்பு வரிசைகள்!

யாழ்ப்பாணம், மே 26

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விநியோக நடவடிக்கைகளை சீர்ப்படுத்துவதற்காக சிறப்பு வரிசைகளைப் பேணுமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் வரிசைகள் நீண்டு செல்கின்றன. இதனால் அனைத்துத் தரப்பினருக்கும் எரிபொருள் கிடைக்கவேண்டும் என்ற நோக்கிலும் அவசர தேவையுடையவர்கள் விரைவில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலும் சிறப்பு வரிசைகளைக் கடைப்பிடிக்குமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள், பரீட்சை மண்டபப் பொறுப்பாளர்கள், சிறப்புத் தேவையுடையவர்கள் அனைவருக்கும் தனியான வரிசைகளில் முன்னுரிமை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மே 9 வன்முறையுடன் தொடர்புடையோரை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி கொழும்பு நீதிவான் நீதி மன்றின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ஒ-இ)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடியவர்களில் 115 பேர் உயிரிழப்பு

**யாழ்ப்பாணம்,மே 26**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில், காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளைத் தேடிப் போராட்டம் நடத்தி வருபவர் களில் 115 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.**

இவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியலைந்து துன் பங்களையும், துயரங்களையும் சுமந்து வயோதிபக் காலங்களில் நோய்வாய்ப்பட்டு, மருத்துவம னைகளிலும், ஏனைய உறவுக ளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றனர். போராட்டக்களங்க ளிலும் தமது வாழ்நாள்களைக் கழித்தனர்.

இவர்களில் 115 உறவுகள் நோய் களால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள் ளனர். வவுனியா மாவட்டத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

உறவுகளைப் பறிகொடுத்தும், வீதிகளிலிருந்து போராட்டங் களை முன்னெடுத்து வரும் தமக்கு, சர்வதேசம் தலையிட்டு, தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

## டோக்கனுக்கு எரிபொருள்



கிளிநொச்சி,மே 26

விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வாகன இலக் கம் பதிவு செய்த பின்னர், டோக்கன் வழங்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு ஒரு தடவை மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மணித்தியாலங்கள் வரிசையில் காத்திருப்போர், எரிபொருள் தீர்ந்து விடுவதால், ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். தொடர்ச்சியாகப் பலர் பல தடவைகள் எரிபொருளைக் கொள்வனவு செய்வதால் ஏனையோ ருக்கு எரிபொருள் கிடைப்பதில்லை. இதன் காரணமாக அமைதியின்மை ஏற்பட்டது.

பின்னர் பொலிஸார், இராணுவத்தினர் வரவழைக்கப் பட்டு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. பரீட்சைக்கு மாணவர்களைக் கொண்டு செல்வதற்காக வந்த பலரும் எரிபொருள் பெறுவதற்காக காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். இதனையடுத்து அனைவருக்கும் எரிபொருள் கிடைக்கக்கூடிய வகையில் டோக்கன் முறை மையைக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-இ)



## தவறவிடப்பட்ட நகை உரியவரிடம் ஒப்படைப்பு

சாவகச்சேரி, மே 26

தவறவிடப்பட்ட நகையை உரியவரிடம் ஒப் படைத்தவருக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பிரதேச சபையில் சாரதியாகக் கடமையாற்றும் சண்முகம் நடேஸ் என்பவர் கொடிகாமம் மக்கள் வங்கிக்கு அருகாமை யில் கண்டெடுக்கப்பட்ட 4 பவுண் நகையை சாவகச்சேரிப் பிரதேசசபை செயலரிடம் ஒப்படைத்தார்.

இதனையடுத்து கொடிகாமம் பகுதியில் உள்ள இடங்களுக்குத் தகவல் அறிவிக்கப் பட்டது. அதற்கமைய நகைக்கு உரியவர் ஆதாரங்களைக் காட்டிப் பிரதேசசபையில் நகையைப் பெற்றார். (ஒ-14,159)

## அதிகரிக்கும் டெங்கு; மக்களுக்கு எச்சரிக்கை

சாவகச்சேரி,மே 26

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங் கின் தாக்கம் அதிகரிப்பதால், மக்கள் தமது வாழ்விடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாக வழிவகுக்காது துப்புரவு பேணு மாறு, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி.சுதோகுமார் அறிவுறுத்தியுள் ளார். கடந்த வாரம் சுகாதாரப் பகுதியினரால் பிரதேசத்தின் மூன்று பிரிவுகளில் நடத்தப்பட்ட விசேட களப்பரிசோதனையில் 500 இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்கள் காணப்பட்டன.

டெங்கு குடம்பிகள் உள்ள 36 இடங்களும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

இவ்வாறான நிலை ஏற்படாமல் இருக்க பொதுமக்கள் முழுமை யான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (க-9)




கரண்ட் போஸ்டைக் கண்டால் நாயள் காலை உயர்த்துற மாதிரி, போற வாற வழியளில எங்கையெல்லாம் பெற்றோலுக்கு வரிசை நிக்குதோ அங்கையெல்லாம் தாங்களும் போய் அந்த வரிசையை இன்னும் நீளமாக்கிற கைங்கரியத்தை எங்கட ஆக்கள் திறமாச் செய்து கொண்டிருக்கினம். இத்தனைக்கும் அதுக்கு முதல் உள்ள செற்றிலையும் பெற்றோல் அடிச்சிருப்பினம். அப்பிடி இருந்தும் ஒரு நப்பாசை. 'இதிலையும் நிண்டு ராங்கை நிரப்புவம். இனி எப்பெப்ப பெற்றோல் வருமோ தெரியாது. ராங்கை புல்லாக்கி வைச்சால் நாலைஞ்சு நாளைக்கு நிம்மதியா இருக்கலாம்' எண்டதுதான் இப்பிடி வரிசை கண்ட இடமெல் லாம் தாங்களும் போய் நிக்கிற வியாதிக்கு காரணம்.

பெற்றோல் செற்றுகளில இப்ப நடக்கிற கூத்துக்களை நாள் முழுக்கச் சொல் லிக்கொண்டே இருக்கலாம். தீவகத்தில ஒரு பெற்றோல் செற்றுக்கு, எல்லா செற்றுக்கும் பெற்றோல் குடுத்து கடைசியாத்தான் அங்க பவுஸர் போயிருக்கு. அங்கத்தைச் சனமும் நாலைஞ்சு நாளா பெற்றோல் இல்லாமல் அந்தரிச்சுப் போச்சுதுகள். சரி, இப்பவாவது வந் திட்டு தானே எண்டு எல்லாரும் மோட்டர் சைக்கிளை எடுத்துக்கொண்டு பெற்றோல் செற்றுக்குப் போனால், அது பூட்டிக் கிடக்கு. பின்னேரம் மூண்டு மணியில இருந்து ஆறு மணி மட்டும் செற் திறபடலே. சனத்துக்கு வெறுத்துப் போய் திரும்புவம் எண்டு நினைக்க, பெற்றோல் செற்றை வந்து திறந்திருக்கினம். 'ஏன் இவ்வளவு நேரமும் திறக்கேலை? பெற்றோல் இல்லாமல் நாங்கள் கஷ்டப்படுகிறம் நீங்கள் இப்பிடி பொறுப்பில்லாமல் பூட்டிப் போட்டு இப்ப வாறீங்கள்?' எண்டு சனங்கள் கேட்டிருக்கு. 'எங்கட கிறவுண்டில புட்போல் மட்ச். அதுக்கு போட்டு வாறன்' எண்டு பெற்றோல் அடிக்கிறவர் ( பம்மர்) சொல்லியிருக்கிறார். சனத்துக்கு அதைக்கேட்டு இன்னும் கடுப்பேறிட்டுது. 'நாங்கள் வாழ்வா, சாவா எண்டு கஷ்டப்படுறம். உனக்கு விளையாட்டுக் கேக்குதோ?' எண்டு குழம்பியிருக்கினம். அதுக்கும் அந்த பம்மர் கிறங்கேலை.

அங்க பரல்களோட வந்த சிலருக்கு அது நிரம்ப பெற்றோல் அடிச்ச பம்மர், மோட்டர் சைக்கிளோட போனவைக்கு வெறும் 500 ரூபாவுக்குத்தான் அடிச்சிருக்கிறார். ' கூட அடிக்கேலாது எண்டு ஓர்டர்' எண்டு தான் செய்யிறதுக்கு நியாயமும் சொல்லியிருக்கிறார். பைக்கில வாறவைக்கு கூடுதலா அடிக்காதவர் எப்பிடி பரலுக்க மட்டும் கணக்குப் பாக்காமல் அடிப்பார்? எண்டு எல் லாரும் தங்களுக்க கதைச்சிருக்கினம்.

அடுத்த நாள் விடிய, செற்றுக்குப் போனால் அங்க பெற்றோல் முடிஞ்சுதாம். 'அதெப்பிடி? இரவு பூட்டேக்க இருந்த பெற்றோல் திறக்கேக்க எப்பிடி இல்லாமல் போகும்?' எண்டு சனம் குழம்பிட்டுதுகள். இரவோட இரவா கடைக்காரர் சிலருக்கு பரல் கணக்கில பெற்றோல் அடிபட்டிருக்காம். அதாலதான் பைக்கில போனவைக்கு வெறும் 500 ரூபாவுக்கு அடிச்சிட்டு, மிச்சமெல்லாம் கொமிசனோட வேற இடங்களுக்கு போயிருக்கு எண்டு சனம் சொல்லுது. இப்பிடி எல்லாத்தையும் பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்க வேண்டியது எங்கட விதிதான் போல.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எரிபொருள் தட்டுப்பாடு; சைக்கிளில் கடமைக்கு

மட்டக்களப்பு, மே 26
எரிபொருள் விலையுயர்வு தட்டுப்பாட்டால் மட்டக்களப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முதல் சைக்கிளில் தமது கடமைக்குச் சென்று வருகின்றனர்.
இதேவேளை- கடமை நேரத்துக்கு மேலதிகமாகப் பணிபுரியும் மேலதிக கொடுப்பனவையும் அரசாங்கம் நிறுத்தியுள்ளது. இதனால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-150)

## வீதித்தடையை அகற்றக்கோரும் வழக்கு விசாரணை ஜூன் 22 இல்

கொழும்பு, மே 26
கொழும்பு நகரிலுள்ள நிரந்தர வீதித்தடைகளை அகற்ற பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு ஜூன் 22ஆம் திகதி பரிசீலிக்க உச்சநீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
இந்த மனுக்கள், நீதியரசர்களான மூர்து பெர்னாண்டோ, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
பொலிஸ் மா அதிபர், கோட்டை மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். கொழும்பு, கொள்ளுப்பிட்டி கோட்டைப் பகுதி மற்றும் அலரி மாளிகைக்கு அருகாமையில் பொலிஸாரால் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர வீதித் தடைகளால் பொதுமக்களின் நடமாடும் சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (ம)

## விதிமுறைகளை மீறி வர்த்தகம்: ஐந்து வர்த்தகர்களுக்கு தண்டம்

சாவகச்சேரி, மே 26
பாவனையாளர்கள் விதிமுறைகளை மீறி வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், சாவகச்சேரியைச் சேர்ந்த ஐந்து வர்த்தகர்களுக்கு 29 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
யாழ்.மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின், அலுவலர்கள் வர்த்தக நிலையங்களில் நடத்திய திடீர்ப் பரிசோதனையில், காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இருவர், பொருள்களின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத மூன்று வர்த்தகர்கள் ஆகியோருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும், காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரு வர்த்தகர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## லிட்ரோ எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படலாம்

லிட்ரோ எரிவாயுவின் விலையை மீண்டும் அதிகரிக்க லிட்ரோ நிறுவனம், அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
12.5 கிலோகிராம் எரிவாயுவின் விலை 5 ஆயிரம் ரூபாவை விட அதிகரிக்கப்படலாம் என்று லிட்ரோ நிறுவன அதிகாரி தெரிவித்துள்ளார்.
டொலரின் விலையுயர்வு, உலக சந்தையில் எரிவாயு விலையின் அதிகரிப்பு என்பவற்றால் தற்போதைய விலையில் எரிவாயுவை விற்பனை செய்ய முடியாது. இந்த நிலையிலேயே எரிவாயுவின் விலையை மீண்டும் அதிகரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.
தற்போது 12.5 கிலோகிராம் எரிவாயுவின் நிர்ணய விலை 4 ஆயிரத்து 860 ரூபா என்ற போதிலும் விற்பனை முகவர்கள் 5 ஆயிரம் ரூபாக்கு விற்பனை செய்வதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர் என்று லிட்ரோ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-14-இ)

## மஹிந்த ராஜபக்ச மாலைதீவில் தஞ்சமா?

### மறுக்கிறார் மொஹமட் நஷீட்

**கொழும்பு, மே 26**
**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்சவுக்கு மாலைதீவு அரசியல் தஞ்சமளிக்கின்றதா? என்ற விவாதம் தற்போது பெரியளவில் பேசுப் பொருளாகியுள்ளது.**

மாலைத்தீவுகளின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் இலங்கைக்கான வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைக்கும் விடயத்தில் சுயவிருப்பத்தில் அடிப்படையில் தலையீடு செய்துள்ளார்.
ஆனால், அவரின் இந்த தலையீடு இலங்கைக்கான சர்வதேச உதவிகளை ஒருங்கிணைப்பதற்காக அல்லாமல் மஹிந்தவை மாலைதீவுக்கு அழைத்துச்சென்று, அங்கு தஞ்சமளிக்கும் நடவடிக்கை என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதற்காக இரு மாளிகைகள் மாலைதீவில் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனினும், இந்தத் தகவல்களை மொஹமட் நஷீட் மறுத்துள்ளார். (ம)

## டிப்பர் - மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மே 26
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை முன்பாக இடம்பெற்ற டிப்பர்- மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மு.ப. 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
ஏ-9 வீதியில் கொடிகாமம் நோக்கிச் சென்ற டிப்பர் வீதியோரத்தில் நின்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டவேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கந்தையா சத்தியசீலன் (வயது-51)என்ற குடும்பஸ்தர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-9)

## இரண்டு அரச வங்கிகளில் ஒரே ஆதனம் அடமானம்

### உடன் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோப்குழு பரிந்துரை



கொழும்பு, மே 26
வரையறுக்கப்பட்ட டபிள்யூ. எம்.மெண்டிஸ் நிறுவனம் தனது ஒரே ஆதனத்தை இரு அரச வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கோப் குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை வங்கியின் 2018 மற்றும் 2019 நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராயும் குழுக்கூட்டம் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இதன்போது கடந்த 5 ஆண்டுகளில் அதிகம் செயற்படாத கடன்களைக் கொண்ட நிறுவனங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதில் வரையறுக்கப்பட்ட டபிள்யு. எம். மெண்டிஸ் நிறுவனம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.
குறித்த வரையறுக்கப்பட்ட டபிள்யூ. எம்.மெண்டிஸ் நிறுவனம் தனது ஒரே ஆதனத்தை இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகிய இரு வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.
குறித்த நிறுவனம் 2021 ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன்களுக்கு அடமானம் வைத்துள்ள ஆதனங்கள் தொடர்பில் குழுவில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை வங்கி அதிகாரிகளிடம் வினவினர்.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க மற்றும் எஸ்.எம். மரிக்கார் ஆகியோர் அண்மையில் மக்கள் வங்கி கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டபோது, குறித்த நிறுவனம் தனது ஒரே ஆதனத்தை மக்கள் வங்கியிலும் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளது.
இரண்டு வங்கிகளிலும் சுமார் 7 பில்லியன் ரூபா கடன் பெற்றுள்ளது எனத் தெரிவித்த அவர்கள் இது தொடர்பில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் விசாரணை நடத்தப்படவேண்டுமெனவும் தெரிவித்தனர்.
இது தொடர்பில் இரு வங்கிகளையும் குழுவுக்கு அழைத்து அறிக்கை ஒன்றைத் தயாரித்து அந்த அறிக்கை மூலம் சட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென கோப் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.
மேலும் இந்தக் குழுக்கூட்டத்தில் அரசுக்குச் சொந்தமான முயற்சியாண்மைகளின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த பற்றாக்குறை தொடர்பில் கோப் குழுவில் கலந்துரையாடப்பட்டன.
கடன்களை மீளப்பெற இயலாத அரசாங்க முயற்சியாண்மைகளுக்கு கடன் வழங்குவது பொருத்தம் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இதன்போது தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கும்

## அமைச்சரவை அனுமதி



**கொழும்பு,மே 26**

**மண்ணெண்ணெயை மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்வதால், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிக நஷ்டத்தை எதிர்கொள்கின்றது. எனவே மண்ணெண்ணெய் விலையில் திருத்தங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**

வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 87 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. எனினும் இதற்கான செலவு 362.26 ரூபா. இதனால் 275.26 ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது. மண்ணெண்ணெய் விலையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மீன்பிடித்துறையினர், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினரே மண்ணெண்ணெயை அதிகளவில் உபயோகிக்கின்றனர். இவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய்ப் பாவனையும் அதிகரித்துள்ளது. குறைந்த விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதால் அதனை முறைகேடாக பயன்படுத்துவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத்துறையின்ரும் டீசல் விலை அதிகரிப்பால், மண்ணெண்ணையைப் பயன்படுத்துகின்றனர். எனவே பேருந்துகளின் புகைப்பரிசோதனை தொடர்பில் விசேட கண்காணிப்பை முன்னெடுக்குமாறு போக்குவரத்து அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (க-இ)

## நாட்டுக்கு அனுப்பப்படுகின்ற டொலர் தொகையில் வீழ்ச்சி



கொழும்பு, மே 26

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பணியாளர்களால் மாதாந்தம் நாட்டுக்கு அனுப்பப்படும் டொலர் தொகையில் வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி மாதாந்தம் அனுப்பப்படுகின்ற டொலர் தொகை 250 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டுக்கு அனுப்பப்படும் டொலர் தொகை துரிதமாக அதிகரிக்கப்படவேண்டும். அதற்கான பெரும் பொறுப்பு இலங்கைப் பணியாளர்களுக்கு உள்ளது என பணியகத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான மேலதிக பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வங்கிகள் ஊடாக நாட்டுக்கு டொலரை அனுப்பும் இலங்கைப் பணியாளர்களுக்குப் பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## நிறுத்தப்படும் வாகனங்களில் பெற்றோல் திருட்டு அதிகரிப்பு

கொழும்பு.மே 26

எரிபொருள் நெருக்கடி தொடர்வதால், நாட்டின் பல பகுதிகளில் வீடுகளில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களில் இருந்து எரிபொருள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. மீரிகம பஸ்யால வீதியில் மல்லொஹேவச் சந்திக்கு அருகில் இரு வீடுகளில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு கார்களின் பெற்றோல் குழாய்கள் வெட்டப்பட்டு பெற்றோல் திருடப்பட்டுள்ளது.

அதேவேளை, அளுத்கமப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் இரவு வேளைகளில் வீடுகளில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டிகளில் இருந்து எரிபொருள் திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## சுப்பர் டீசலின் தற்போதைய இருப்பு கேள்வியை விட 10 வீதம் குறைவு!

கொழும்பு, மே 26

சுப்பர் டீசல் மற்றும் ஒக்ரேன் 95 ரக பெற்றோல் என்பனவற்றின் இருப்பு சந்தையில் நாளாந்த தேவையை விட 10 சதவீதம் குறைவாகவே காணப்படுகின்றது என்று வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களின் விலையை அதிகரிப்பது இதற்குத் தீர்வாக அமையாது. இது குறைந்த விலையுடைய பொருள்களுக்கு செயற்கையான கேள்வியை உருவாக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## வீட்டுத்தோட்டம் குறித்து அவதானம் செலுத்துக!

### பொதுமக்களிடம் அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, மே 26

நாட்டின் விவசாயத்துறை பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. பெரும்போக விவசாயம் வீழ்ச்சியடைந்துள்ள பின்னணியில் சிறுபோக விவசாயமும் வீழ்ச்சியடைந்தால் மிக மோசமான உணவுப் பற்றாக்குறையை முழுநாடும் எதிர்கொள்ளும். எனவே வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை குறித்து முழு நாட்டு மக்களும் அவதானம் செலுத்த வேண்டும் என விவசாயத்துறை மற்றும் வன உயிரிகள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு அல்லது உணவுத்தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் மனம்போன போக்கில் குறிப்பிட்டார். இவ்வருடம் பெரும் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிடும் என்பதை சுற்றாடல்துறை அமைச்சராக பதவி வகிக்கையில் குறிப்பிட்டேன். உரப் பிரச்சினையினால் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பாரதூரமான பிரச்சினைகளை விளக்கியும், விவசாயத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு அவதானம் செலுத்தியும் உணவுத் தட்டுப்பாடு தொடர்பில் விடயங்களை வெளிப்படுத்தினேன்.

உணவுத் தட்டுப்பாடுச் சவாலை எதிர்க்கொள்ளும் நோக்கில் கடந்த அரசாங்கத்தில் சுற்றாடற்துறை அமைச்சராக பதவி வகித்துக் கொண்ட நிலையில் நாட்டில் விவசாயத்துறை பயிர்செய்கையை ஊக்குவிக்கும் திட்டங்களை செயற்படுத்தும் யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்தேன். சேதனப் பசளைத் திட்டம் சிறந்ததாயினும் தற்போது அத்திட்டத்தை விவசாயிகள் வெறுக்கும் நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

இரசாயன உரம், கிருமிநாசினிகள் இல்லாமல் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என நான் குறிப்பிட்ட போது ஒருசிலர் அதற்கு எதிரான கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். சேதனப் பசளைத் திட்டத்தை செயற்படுத்த ஜனாதிபதி 17 அமைச்சுக்களை உள்ளடக்கிய விசேட குழுவை நியமித்தார். எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைய ஒருசில தரப்பினர் ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் நாட்டின் விவசாயத்துறை பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது.

பல்வேறு காரணிகளினால் பெரும்போக விவசாயம் முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபடாமல் விவசாயிகள் எரிபொருள் வரிசையில் காத்திருக்கிறார்கள். சிறுபோக விவசாயமும் பாதிக்கப்பட்டால் நாடு மிக மோசமான உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள நேரிடும் - என்றார். (ம)

## நாடளாவிய ரீதியில் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடல்

கொழும்பு, மே 26

நாடளாவிய ரீதியில் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களை மிரட்டி எரிபொருள் பெறுதல் மற்றும் எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் போராட்டங்களை மேற்கொள்ளல் ஆகிய வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையிலேயே குறித்த நிலையங்கள் மூடப்படுகின்றன என சங்கத்தின் இணைச் செயலாளர் கபில நாம்புடுன்ன தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகத்தை முறையாக மேற்கொள்ள ஆதரவு வழங்கப்படாவிடின் எதிர்வரும் காலங்களில் மூடப்படும் எரிபொருள் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அவர் மேலும் எச்சரித்துள்ளார். (ச-இ)

## வவுனியா மருத்துவமனைக்கு மருந்துகள் வழங்கிவைப்பு!





வவுனியா , மே 26

வவுனியா பொதுமருத்துவமனைக்கு நோயாளர் நலன்புரி சங்கத்தால் ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அனைத்து மருத்துவமனைகளிலும் மருந்துப் பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் வவுனியா மருத்துவமனைக்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கண் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான மருந்துப் பொருள்கள் நோயாளர் நலன்புரி சங்கத்தின் நிர்வாகத்தால் கையளிக்கப்பட்டன. (ய-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் பிரதேசசபையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 26

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காகச் சட்ட நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பான கலந்துரையாடல் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து அகற்றுவதற்குரிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் வட்டார ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கமைய எதிர்காலத்தில் முழுமையாக விழிப்புணர்வு செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர் பொது இடங்களில் குப்பை கூளங்களை அகற்றுபவர்கள் மற்றும் தரம் பிரிக்காது குப்பைகளை அகற்றுபவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வலி.மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்கள், வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட இளவாலை, மானிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய பொலிஸ் நிலையங்களின் சுற்றுச்சூழல் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14,125)

## முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாணத்தில் உள்ள சில எரிபொருள் நிலையங்களில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றில் பணியாற்றுபவர்களுக்கு நேற்று பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும், அதிகாரிகளின் கண்காணிப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## நாடு திரும்பினார் யோஷித ராஜபக்ச



கொழும்பு, மே 26

கடந்த 9ஆம் திகதி இலங்கையிலிருந்து வெளியேறிய யோஷித ராஜபக்சவும் அவரது மனைவியும் நேற்றுமுன்தினம் மீண்டும் இலங்கை திரும்பியுள்ளனர்.

சிங்கப்பூரிலிருந்து அவர்கள் இலங்கை வந்தனர் என விமானநிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

யோஷித ராஜபக்ச நித்சீ ஜயசேகர இருவரும் இரவு வர்த்தக ரீதியில் முக்கியமான நபர்களுக்கான பகுதி ஊடாக விமானநிலையத்துக்குள் நுழைந்துள்ளனர்.

அவர்கள் கறுப்பு உடையணிந்திருந்தனர் என்றும் அவர்களை பலர் விமான நிலையத்துக்கு வெளியே சந்தித்து வாகனத்தில் ஏற்றிச் சென்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

யோஷித ராஜபக்ச கடந்த 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை இலங்கையிலிருந்து புறப்பட்டுச்சென்றார். அதன் பின்னர் காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் இடம்பெற்றது. (எ-இ)

# தமிழக சிறையில் வாடும் உறவுகளை விடுவிக்குக!

### மாந்தை கிழக்கில் தீர்மானம் நிறைவேற்றம்

**முல்லைத்தீவு, மே 26**

**தமிழக சிறையிலுள்ள ஈழத்தமிழ் உறவுகளை விடுவிக்கக்கோரி மாந்தை கிழக்குப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**



முல்லைத்தீவு- மாந்தை கிழக்கு பிரதேசசபையின் அமர்வு நேற்றுமுன்தினம் மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் மகாலிங்கம் நந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே குறித்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கடவுச்சீட்டு இன்றி உள்நுழைந்த குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டு தமிழகம் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர். தம்மை விடுவித்து தத்தமது உறவுகளுடன் சேர்ந்து வாழவிடுமாறுகோரி அவர்கள் அண்மையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே அவர்களை விடுவிக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுத்து அவர்களின் வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டுமென தமிழக முதல்வரையும் இலங்கைக்கான இந்தியத் தூதுவரையும் வலியுறுத்தி மாந்தை கிழக்குப் பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச-19)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் தேங்காயின் விலை வீழ்ச்சி

### தோட்ட உரிமையாளர்கள் கவலை

சாவகச்சேரி, மே 26



தென்மராட்சிப் பிரதேசத்தில் தேங்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தென்னந்தோட்ட உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தோட்டங்களில் தேங்காய் ஏற்றுவதற்கு வியாபாரிகள் வருவதில்லை. இதனால் தோட்டங்களில் பறிக்கப்பட்ட தேங்காய்கள் விற்பனை செய்ய முடியாமல் தேங்கிக் காணப்படுகின்றன. அத்துடன் தேங்காய் கொள்வனவு செய்ய வருவோர் மிகக் குறைந்த விலையையே கேட்கின்றனர். சிறுதோட்ட உற்பத்தியாளர்கள் நாளாந்தம், குறித்த அளவு தேங்காய்களை சந்தைகளுக்குக் கொண்டு செல்கின்றனர். ஆனால், பெருந்தோட்ட உரிமையாளர்களே இப்போது அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றனர்.

இதேவேளை- அண்மைக்காலமாக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைக்கு வழமைபோன்று தேங்காயின் வரவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14,9)

## கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்காத மஹிந்த!

கொழும்பு, மே 26

காலிமுகத்திடலில் அமைதியான முறையில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது நடத்தப்பட்ட மூர்க்கத்தமான தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டு அவரது கடவுச் சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தபோதும், இதுவரை அவர் கடவுச்சீட்டை ஒப்படைக்கவில்லை என்று நேற்றுக் கோட்டை நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

சட்ட மா அதிபர் சார்பில் இந்த விசாரணைகளை மேற்பார்வைச் செய்யும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் அய்ஷா ஜினசேன இதனை கோட்டை நீதிவான் திலின கமகேவின் கவனத்துக்கு இந்த விடயங்களைக் கொண்டுவந்தார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும், ரேணுக பெரேரா எனும் நபரும் தமது கடவுச் சீட்டுகள் அழிவடைந்துவிட்டது என்று அறிவித்துள்ளனர் என்றும், வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்ட பட்டியலில் உள்ளடங்கும் மஹிந்த கஹந்தகம உள்ளிட்ட மூவர் எங்கு இருக்கின்றார்கள் எனபதே தெரியவில்லை என்றும் அவர் நீதிமன்றுக்குத் தெரிவித்தார். கடந்த 9 ஆம் திகதி அலரி மாளிகையில் நடந்த கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர்களான பவித்ரா வன்னி ஆராச்சி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, காஞ்சன ஜயரத்ன, நாமல் ராஜபக்ச, ரோஹித்த அபே குணவர்தன, சி.பி. ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஞ்ஜீவ எதிரிமான்ன, சம்பத் அத்துகோர ஆகியோரும் ரேணுக பெரேரா ஆகிய 9 பேருக்கும் நீதிமன்றம் வெளிநாடு செல்ல தடை விதித்தது. தாக்குதல் நடத்தச் சென்ற கும்பலில் இருந்தனர் என்று அடையாளம் காணப்பட்ட முன்னாள் அமைச்சர் சனத் நிசாந்த, நிசாந்த ஜயசிங்க, அமித்த அபேவிக்ரம, புஷ்ப லால் குமார, மஹிந்த கஹந்தகம, திலிப் பெர்னாண்டோ ஆகியோருக்கும் வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 26

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 13ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 14ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 16ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14)

### தென்கோவை திருவருள்மிகு கற்பகப் பிள்ளையாருக்கு இன்று தேர்

இருபாலை கோப்பாய் கற்பகப் பிள்ளையார் தேர் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை8 30மணிக்கு வசந்த மண்டபபூசையுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து மு.ப. 10 மணிக்கு விநாயகர் தேரில் ஆரோகணிப்பார். அதன் பின்னர் பிள்ளையார் தேரில் இருந்து இறக்கப்பட்டு பஞ்சமுகார்ச்சனை இடம்பெறும் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பதவிப் பந்தாடல்கள்...!

இலங்கையின் பொருண்மிய நெருக்கடிக்கு - டொலர் இருப்பைப் பேணுவதற்கு சுற்றுலாத்துறையின் வகிபங்கு மிகப்பெரியது. சுற்றுலாத் துறையின் எழுச்சியே இலங்கையின் மீட்சி என்ற நிலையில், அதற்கு இம்மியும் வாய்ப்பில்லை என்பதையே அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் துறைசார் சம்பவங்கள் வெளிக்காட்டுகின்றன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்த கிர்மாலி பெர்னாண்டோ தனது பதவியைத் துறந்துள்ளார். பதவி விலகுவதற்கு அவர் முன்வைத்துள்ள காரணம்தான் மிகப்பெரியதும் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டியதுமாகும். 'சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும் கலந்துரையாடுவதற்கும் அமைச்சரைச் சந்திக்க இயலவில்லை. இந்த இக்கட்டான நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்கவல்லதான சுற்றுலாத்துறை தொடர்பாக, துறைசார் அமைச்சரைச் சந்திக்க முடியாமல்போனமை வருத்தமளிக்கின்றது. இது இலங்கைக்கு நல்லதல்ல' என்று தனது பதவி விலகல் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார் கிர்மாலி.

பிரதமராக ரணில் பொறுப்பேற்ற பின்னர், அவர் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்படும் அமைச்சர்களினதும் அந்த நியமனங்களின் பின்னரான சீத்துவத்தையும் இந்தப் பதவி விலகல் மெய்ப்பித்துள்ளதுடன், தற்போது 'புதிய அரசாங்கம்' என்ற போர்வையில் நடந்துகொண்டிருப்பவை அதிகாரங்களைப் பெறுவதற்கான சதிராட்டங்களும் ராஜபக்சக்களை காப்பாற்றிவிடும் கைங்கரியமும் கூட என்பதை கிர்மாலியின் கருத்துக்கள் கனகச்சிதமாக படம்போட்டுக் காட்டவே செய்திருக்கின்றன.

தற்போதைய அரசாங்கத்திடமோ அல்லது அமைச்சரவையிலோ 'அரசியல் உறுதித்தன்மை' என்பது இம்மியும் இல்லை. 'பதவியேற்றலும் பதவிவிலகலுமே' இப்போது அரசாங்கத்தில் மாறிமாறி நடந்துகொண்டிருக்கின்றன. இன்று ஒரு துறைக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் அடுத்த வாரம் இன்னொரு துறைக்கு மாற்றப்படுகின்றார். இப்படியிருக்கையில் துறைசார் பொறுப்புக்கூறல் என்பதை இந்த நியமனங்களின் மூலம் எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? இந்த நியமனப் பந்தாடல்களின் மூலம் பொறுப்புக்கூறலும் வினைத்திறனான நிர்வாக நகர்வுகளும் முற்றுமுழுதாக இல்லாமல் செய்யப்படுகின்றன. கிர்மாலியின் பதவி விலகலும், தனது பதவி விலகலுக்காக அவர் முன்வைத்துள்ள காரணங்களும், அமைச்சரவை நியமனப் பந்தாடல்களின் பிரதிபலிப்பு என்பதை மறுத்துரைக்க முடியுமா?

இவ்வாறாக நிர்வாக உறுதித்தன்மை இல்லாத நிலையில் எவ்வாறு வளர்ந்த நாடுகள் இலங்கைக்கு உதவி செய்வதற்கு முன்வரும்? எவ்வாறு சுற்றுலாத்துறை மேம்படும்? வெளிநாட்டு முதலீடுகளும் சுற்றுலா முதலீடுகளும் இலங்கைக்குள் வரவேற்கப்படுகின்றன என்று மாறிமாறி கூவிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி கோத்தாபயவும், பிரதமர் ரணிலும் குறைந்தபட்சம் இந்த முதலீடுகளை ஈர்க்கவல்ல முதன்மைத்துறையான சுற்றுலாத்துறையிலேனும் ஓர் உறுதித்தன்மையை ஏற்படுத்தினார்களா? என்று கேட்டால், அதற்குரிய பதில்தான் இவர்களின் 'நிர்வாக இலட்சணம்'.

'செக்குமாடு' தன் புள்ளியில் இருந்து விலகாதிருப்பது போன்று இலங்கை அரசாங்கமும் கடன் என்ற ஒற்றைத் தெரிவைக் கைவிடுவதாக இல்லை. கடன்களை வாங்கிக் குவித்து ஒவ்வொரு வாரமாக தன் காலத்தைச் செலுத்திவிட்டால் போதும் என்ற போக்கில்தான் அரசாங்கம் நகர்ந்துகொண்டிருக்கின்றது. மாறாக நீண்டகால திட்டத்தைக் கைக்கொண்டு நிரந்தரவிடிவை நோக்கிப் பயணப்பட இந்த அரசாங்கம் இதயசுத்தியுடன் தலைப்பட்டிருந்தால் இன்று குறைந்தபட்சம் சுற்றுலாத்துறையாவது மீட்சி கண்டிருக்குமே!

## நாளொரு நல்வார்த்தை

"பிறரது குற்றங்களை பற்றி ஒரு போதும் பேசாதே; அதனால் உனக்கு ஒரு பயனும் விளைவதில்லை" - சுவாமி விவேகானந்தர்



# ஐ.எம்.எவ் இடைக்கால கடன் ஜூனில் பெற எதிர்பார்ப்பு!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

**சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து ஜூன் மாத நடுப்பகுதியில் இடைக்காலக் கடன் தொகை ஒன்றைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



ப்ளூம்பேர்க் செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. ஜூன் மாத நடுப்பகுதியில் சிறிய கடன் தொகை ஒன்றையாவது பெற்றுக்கொள்ளவேண்டும். அது சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகையில் 2 சதவீதமாக இருந்தாலும் பரவாயில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்தே எமது திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். அதன் ஊடாக சீனா, ஜப்பான் போன்ற கடன் வழங்கக்கூடிய நாடுகளிடம் இருந்து தேவையான கடன்களைப் பெறமுடியும்.

இந்த ஆண்டு இலங்கைக்கு 4 பில்லியன் டொலர் தேவைப்படுகின்றது. எமக்கு அதிகமான டொலர் கிடைக்கும் பட்சத்தில் அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்து மக்களின் கோபத்தைக் குறைக்க முடியும்-என்றார். (எ-இ)

# ஆறு வாரங்களுக்குள் இடைக்காலப் பாதீடு!

### நிதியமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 26

அடுத்த இரண்டு வருடங்களுக்கான நிவாரணத் திட்டங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கவுள்ளார். அதன்படி, 6 வாரங்களுக்குள் இடைக்காலப் பாதீட்டை சமர்ப்பிற்பதற்கு அவர் திட்டமிட்டுள்ளார்.

சர்வதேச ஊடகமான ரொய்ட்டருக்கு வழங்கிய செவ்வியிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் டொலரின் இருப்பு இல்லாமல் போயுள்ளது. இதேவேளை, ரூபா வருமானமும் இன்மையால் ஒரு ட்ரில்லியன் ரூபா பணத்தை அச்சிட வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. உட்கட்டுமான வேலை திட்டங்களின் நிதி ஒதுக்கங்கள் துண்டிக்கப்பட்டு மக்கள் நிவாரணங்களுக்காக ஒதுக்கப்படும். தற்போது நாட்டில் வருமானம் இல்லை. நாட்டின் பணவீக்கம் மேலும் 40 சதவீதமாக உயர்வடையும் - என்றார். (ம)

நாளை

27.05.2022 வெள்ளிக்கிழமை

வைகாசி 13

சுபநேரம் : 05.52 - 07.22

ராகுகாலம்: 10.22 - 11.52

பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஆர்.சனத்



# ரணிலின் அரசியல் பாதையில் புதியதொரு அத்தியாயம்

சர்வகட்சி அரசாங்கத்தின் (?) நிதி அமைச்சு பதவியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுள்ளார்.

நிதி அமைச்சுப் பதவியை ஏற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுக்கு, அரச தரப்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்கு அவர் உடன்படவில்லை. ஏற்கனவே நிதி அமைச்சராகச் செயற்பட்ட அலி சப்ரியும் அமைச்சுப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். இந்த நிலையிலேயே, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு, இடைக்கால வரவு- செலவுத் திட்டம் உள்ளிட்ட விடயங்களை கருத்திற்கொண்டு, நிதி அமைச்சுப் பதவியையும் ரணில் பொறுப்பேற்றுள்ளார்.

## முதல் தடவை

1977 இல் நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அதே ஆண்டிலேயே பிரதி அமைச்சுப் பதவியும், அதன்பின்னர் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டன. அதன்பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் கல்வி உட்பட முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார். பொருளாதார விவகார அமைச்சராகவும் செயற்பட்டுள்ளார். 6 தடவைகள் பிரதமராகவும் பதவியேற்றுள்ளார். எனினும், தனது 45 வருடகால நாடாளுமன்ற அரசியல் வாழ்வில் ரணில் விக்கிரமசிங்க இன்னமும் நிதி அமைச்சுப் பதவியை வகித்ததில்லை. வரவு - செலவுத் திட்டத்தையும் முன்வைத்து உரையாற்றியதில்லை. இம்முறையே அதற்கான வாய்ப்பும் கிட்டவுள்ளது. அடுத்த மாதம் இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்க முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கியானது, நிதி அமைச்சின் கட்டுப்பாட்டின்கீழ்தான் இருப்பது வழமை. இன்னும் அமைச்சுகளுக்கான அரச நிறுவனங்கள் பட்டியலிடப்படவில்லை. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகே, எந்தெந்த அமைச்சுக்கு, எந்தெந்தத் துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்ற உறுதியான முடிவுக்கு வர முடியும். பிரதமருக்குக் கீழ் முக்கியமான பல அரச நிறுவனங்கள் வரவுள்ளன.

## 24ஆவது நிதியமைச்சர்

1947ஆம் ஆண்டில்தான் இலங்கையில் முதலாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது. பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க தலைமையில் அமைந்த அமைச்சரவையில், ரணில் விக்கிரமசிங்கவின் மாமாவான, ஜே.ஆர்.ஜயவர்தனவே நிதி அமைச்சராகப் பதவி வகித்தார். அவர்தான் முதலாவது நிதி அமைச்சரும்கூட. அதுமட்டுமல்ல இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்தியதும் அவர்தான். ஜே.ஆரின் வழியில் பயணிப்பவரெனக் கருதப்படும் ரணில் விக்கிரமசிங்க, கட்சியிலும், ஆட்சியிலும் தனது மாமா வகித்த அத்தனை பதவிகளையும் வகித்துள்ளார். எனினும், ஜனாதிபதி என்ற இலக்கு மட்டுமே ரணிலுக்கு இன்னும் எட்டாக்கனியாக உள்ளது.

இலங்கையில் இதுவரை 23 பேர் நிதி அமைச்சுப் பதவியை வகித்துள்ளனர். இறுதியாக ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, அந்த அமைச்சுப் பதவியை வகித்தார். அந்தவகையில் ரணில் விக்கிரமசிங்கவை 24ஆவது நிதி அமைச்சரெனக் குறிப்பிடலாம்.

எனினும், ஜே.ஆர். ஜயவர்தன, என்.எம். பெரேரா, மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட மேலும் சில நிதி அமைச்சர்கள் இரு தடவைகளுக்கு மேல் நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ளனர். அந்தப் பட்டியலின் அடிப்படையில் கணக்கிட்டால், ரணில் விக்கிரமசிங்க 39ஆவது நிதி அமைச்சராகவே கருதப்படுவார். இலங்கை அரசியல் வரலாற்றில் நிதி அமைச்சுப் பதவியை வகித்தவர்களில் றொனி டி மெல் என்பவரே 12 தடவைகள் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில், 1977 முதல் 1988 வரை இவரே நிதி அமைச்சராகச் செயற்பட்டார். நிதி அமைச்சர் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ச 11 வரவு - செலவுத் திட்டங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளார். றொனி டி மெலின் சாதனையை சமப்படுத்துவதற்கு மஹிந்தவுக்கு இருந்த வாய்ப்பு நழுவ விடப்பட்டது.

தான் வகித்த நிதி அமைச்சுப் பதவியை, பஸில் ராஜபக்சவுக்காக அவர் விட்டுக்கொடுத்தார்: இதனால் கடந்த வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சரான பஸிலே முன்வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ரணில் நிதியமைச்சைப் பொறுப்பெடுத்த பின்னணி வித்தியாசமானது. கடுமையான நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலேயே முக்கிய சவால்களை ரணில் ஏற்றுள்ளார். ரணிலின் வரவு - செலவுத்திட்டமாவது இலங்கைக்கு மீட்சி வழங்குமா? இலங்கை தொடர்பான சர்வதேச நம்பிக்கையைப் பெறுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம். ■
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** கையிருப்பு இன்று கரையும். பல வழியிலும் செலவுகள் உண்டாகும். கவனம் தேவை. வருமானத்துக்கு ஏற்ப செலவும் வந்து நிற்கும். ஆடம்பர செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** வருமானத்தில் இருந்த தடை விலகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்குப் பண வரவு வந்து சேரும்.

**மிதுனம்:** தொழிலில் இருந்த தடை விலகும். முயற்சியில் வெற்றி கிடைக்கும். அரசுவகையில் ஆதாயம் உண்டு. தொழிலில் ஏற்பட்ட சரிவை சரிசெய்வீர்கள்.

**கடகம்:** புதிய சிந்தனை மேலோங்கும். இழுபறியான செயலையும் பெரியோர் ஆதரவுடன் முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். மனதில் இருந்த குழப்பம் விலகும். செல்வாக்கு உயரும்.

**சிம்மம்:** புதிய வேலைகளில் இன்று ஈடுபட வேண்டாம். மனதைப் பாதிக்கும் சம்பவங்கள் இன்று நடக்கலாம். நிதானமுடன் செயற்பட வேண்டிய நாள். பயணத்தில் கவனம் தேவை.

**கன்னி:** இனிய சம்பவம் நடைபெற்று மகிழ்வீர்கள். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். மகிழ்ச்சியான நாள். கணவன்- மனைவி பிரச்சினைகள் விலகும். ஆதாயம் அதிகரிக்கும்.

**துலாம்:** உங்கள் செயல்களால் இன்று ஆதாயம் காண்பீர்கள். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். மனதில் இருந்த சங்கடம் விலகும். தடைகளை உடைத்து வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:** செயல்களில் இன்று சில தடைகளைச் சந்திப்பீர்கள். எளிதாக முடியவேண்டிய வேலை இழுபறியாகும். கவனக்குறைவால் முயற்சிகளில் தடைகளைச் சந்திப்பீர்கள். யோசித்து செயற்பட வேண்டிய நாள்.

**தனுசு:** அரசு வகையில் பிரச்சினை வரலாம். சட்டத்துக்குப் புறம்பான செயல்களால் சங்கடம் உண்டாகலாம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். நண்பர்களின் சந்திப்பால் நன்மை காண்பீர்கள்.

**மகரம்:** புதிய அணுகுமுறையால் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். நெருக்கடிகளை துணிச்சலுடன் சமாளிப்பீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்:** கவனக்குறைவால் நஷ்டங்களை சந்திக்கலாம். புதிய முதலீடு குறித்த முயற்சி இன்று வேண்டாம். அலட்சியத்தால் சிலவற்றை தவற விடுவீர்கள். வீண்விவாதங்களில் ஈடுபடாதீர்கள்.

**மீனம்:** மனதில் தெளிவு பிறக்கும். உங்களைச் சுற்றி இருப்பதில் நல்லவர், கெட்டவர் யார் யார் என்பதை தெரிந்து கொள்வீர்கள். மனதில் ஓய்வு குறித்த எண்ணம் மேலோங்கும்.



## அமெரிக்காவில் பயங்கரம்:
# 18 குழந்தைகள் சுட்டுக்கொலை

**வொஷிங்டன், மே 26**

**அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள தொடக்கப் பள்ளி ஒன்றில் நேற்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் 18 குழந்தைகள் மற்றும் ஓர் ஆசிரியர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

சான் அன்டோனியோவுக்கு மேற்கே 85 மைல் தொலைவில் உள்ள உவால்டேயில் உள்ள தொடக்கப் பள்ளி ஒன்றில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது.

இந்தக் கொடூரச் செயலை 18வயதுடையவரே நடத்தியுள்ளார் எனவும் அவர் அப்பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளி மாணவராக இருக்கலாம் எனவும் அந்நாட்டுப் பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு துப்பாக்கியுடன் தொடக்கப் பள்ளிக்குள் நுழைந்த குறித்த நபர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தன்னைத் தானே சுட்டு அவரும் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் படுகாயம் அடைந்த குழந்தைகள் அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

**ஜோ பைடன் இரங்கல்**

துப்பாக்கிச்சூட்டில் இறந்த குழந்தைகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் தருணம் வந்துவிட்டது. ஒரு குழந்தையை இழப்பது ஆன்மாவின் ஒரு துண்டைப் பிய்த்து எடுப்பதுபோன்ற வலி தரும். நெஞ்சில் வெறுமை ஏற்படும். இது பெற்றோருக்கு நீங்கா சோகம். இதற்கு முடிவுகட்ட அனைவருமே ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ச-இ)

## விஸ்மயா தற்கொலை வழக்கு:
# வரதட்சணை கேட்டு துன்புறுத்திய கணவருக்கு 10 ஆண்டுகள் சிறை



கொல்லம், மே 26

கேரளாவில் வரதட்சணைக் கொடுமையால் தற்கொலை செய்துகொண்ட ஆயுள்வேத மருத்துவ மாணவி விஸ்மயா வழக்கில் கணவர் கிரண்குமாருக்கு 10ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் 12.5 லட்சம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு கேரள மாநிலத்தில் ஆயுள்வேத மருத்துவ மாணவி விஸ்மயா, கிரண்குமார் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணத்துக்கு வரதட்சணையாக 1 ஏக்கர் மதிப்பிலான ரப்பர் தோட்ட நிலம், 100 பவுண் நகை, ரொக்கம் என வழங்கப்பட்டன. இருப்பினும் மேலும் வரதட்சணை கேட்டு கணவர் விஸ்மயாவை மோசமாகத் துன்புறுத்தினார். இதனால் அவர் குளியலறையில் தூக்கிட்டுத் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

இதைத்தொடர்ந்து கிரண் மீது விஸ்மயா குடும்பத்தினர் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்தநிலையில் கிரண்குமார் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ரூ.12.5 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தனுஷின் ஹொலிவூட் படத்தின் ட்ரெய்லர் வெளியாகியது




சென்னை, மே 26

தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'தி கிரே மேன்' என்ற ஹொலிவூட் படத்தின் ட்ரெய்லர் வெளியாகி சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

ஹொலிவூட் நடிகர் தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் படம் 'தி கிரே மேன்'.

இந்தப் படத்தை அவெஞ்சர்ஸ் இன்பினிட்டி வார், அவெஞ்சர்ஸ் என்ட்கேம், கப்டன் அமெரிக்கா விண்டர் சோல்ஜர், சிவில் வார் போன்ற படங்களை இயக்கிய ரூஸோ சகோதரர்கள் இயக்கி உள்ளனர்.

இந்தப் படம் 2009இல் வெளியான 'தி கிரே மேன்' என்ற நாவலைத் தழுவி அதே தலைப்பில் உருவாகிறது.

இந்த நிலையில் 'தி கிரே மேன்' படத்தின் ட்ரெய்லரை தனுஷ் அவருடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்த ட்ரெய்லர் தற்போது ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்தப் படம் ஓடிடி தளத்தில் ஜூலை மாதம் 22ஆம் திகதி வெளியாகவுள்ளது. (ச-இ)

# உலக சுகாதார அமைப்பின் தலைவராக மீண்டும் அதனோம்

லண்டன், மே 26

உலக சுகாதார அமைப்பின் தலைவராக மீண்டும் டெட்ரோஸ் அதனோம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எத்தியோப்பியாவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரான டெட்ரோஸ் அதனோமை எதிர்த்து எவரும் போட்டியிடாத நிலையில் அவர் மீண்டும் தலைவராகத் தெரிவாகியுள்ளார்.

இவர் அடுத்த 5 ஆண்டுகளுக்கு தலைவராகச் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலும் வடகொரியா ஏவுகணைச் சோதனை



பியாங்யாங், மே 26

வடகொரியா மீண்டும் நேற்று ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது. ஜப்பான் கடல் பகுதியை நோக்கி கண்டம்விட்டு கண்டம் பாயும் 3 ஏவுகணைகளை ஏவி சோதனை செய்துள்ளது என தென்கொரிய [illegible] அமெரிக்கா [illegible] நடந்த குவாட் அமைப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்றுவிட்டு தனது நாட்டுக்குப் புறப்பட்ட சில மணி நேரத்திலேயே வடகொரியா ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியாவில் அதிவேகமாகப் பரவிவரும் [illegible] பாதிப்புக்கு மத்தியிலும் ஏவுகணை [illegible]னையைச் வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கீட்டு அட்டைக்கு பெற்றோல் விநியோகம்

## வாகன சாரதிகள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 26**

**பெற்றோல் கொள்வனவு செய்ய நீண்ட வரிசையில் காத்திருப்போரின் எண்ணிக்கையைக் குறைக்க, பங்கீட்டு அட்டைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வாகனச் சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

நாட்டில் பெற்றோல் தட்டுப்பாடு விரைவில் நீங்கும் என்று எதிர்பார்க்கமுடியாது.

எனவே அனைவருக்கும் சம அளவில் பெற்றோல் கிடைக்க வேண்டுமெனில் பங்கீட்டு அட்டை முறைமையை நடைமுறைப்படுத்தவேண்டும். முதியவர்கள், பெண்கள் போன்றோருக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். டோக்கன் வழங்கும் முறைமையையும் கொண்டுவரவேண்டும். பெற்றோலுக்கு அளவாக முன்கூட்டியே டோக்கன் வழங்கப்பட்டால், கொள்வனவுக்குக் காத்திருப்போர் ஏமாற்றமடைய வேண்டியதில்லை.

இவ்வாறான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படின் பொலிஸாரின் பாதுகாப்பு அவசியமற்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (க-9)



## நடமாடும் சேவையில் நாற்றுக்கள் விற்பனை

யாழ்ப்பாணம், மே 26

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், நடமாடும் சேவை மூலம் விதைகள், நாற்றுக்கள் மற்றும் நடுகைப்பொருள்கள் விற்பனை, புத்தூர் சந்தியில் அமைந்துள்ள சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் இதனை ஏற்பாடு செய்தது. நடமாடும் சேவையில் தக்காளி, கறிமிளகாய், கத்தரி, அவரை, கொத்தவரை, துவரை மற்றும் மரக்கறி விதைகளும், பொதி செய்யப்பட்ட மரக்கறி நாற்றுகளும், மரவள்ளிக் கட்டைகள், பழமரக்கன்றுகள், சேதனப்பசளை மற்றும் இயற்கை பீடை நாசினிகளும் விற்பனை செய்யப்பட்டன. (க-159)



## யாழ்.பல்கலைக்கழகத்தில் தாதியர் சின்னம் சூட்டல்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானபீடத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறிய தாதியர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவமும், சத்தியப்பிரமாணம் ஏற்கும் நிகழ்வும் அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது.

பல்கலையின் இணைந்த சுகாதார விஞ்ஞானபீடாதிபதி தெய்வி தபோதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், யாழ்ப்பாண தாதிய பயிற்சிக்கல்லூரி அதிபர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-14)

## சட்டவிரோத சமாதிகள் உரியவர்களிடம் தண்டம்

யாழ்ப்பாணம், மே 26

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட சங்கானைப் பகுதியில் அமைந்துள்ள மயானம் ஒன்றில், அனுமதி பெறாது, சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட சமாதிகளுக்கு, உரியவர்களிடம் தண்டம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சபையின் 51 ஆவது அமர்வில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதையடுத்து, ஒரு சதுர அடிக்கு ஆயிரம் ரூபா தண்டம் அறவிடுவதுடன், முறைப்படி சமாதிகளை அமைக்க பரிசீலனைக் கட்டணமாக 3 ஆயிரம் ரூபாவை அறவிடுவது எனவும் சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (க-125)



## பதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் பங்கீட்டு அட்டைக்கு விநியோகம்

முல்லைத்தீவு, மே 26

முல்லைத்தீவு எரிபொருள் நிலையத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெய் குடும்ப பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் கடந்த 15 நாள்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் வழங்கவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் பதுக்கி வைத்திருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட விலை கட்டுப்பாட்டுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த எரிபொருள் நிலையத்தில் 900 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டது.

தகவலறிந்து அந்தப் பகுதிக்கு வருகை தந்த மக்கள் ஒவ்வொருவருக்கும் குடும்ப பங்கீட்டு அட்டைக்கு ஏற்ற வகையில் விநியோகிக்கப்பட்டது. (ஒ-14-இ)

## கோடீஸ்வரர்களாக இருக்கும் எம்.பி.க்கள் வாக்களித்தோருக்கு என்ன செய்தனர்?

### மீனவர்கள் ஆதங்கம்

மன்னார், மே 26

கோடீஸ்வரர்களாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமக்கு வாக்களித்த மக்களுக்கு என்ன செய்தனர்? ஒரு ரூபாவைக் கூட வாக்களித்த மக்களுக்காக தானம் வழங்க அவர்களுக்கு மனம் வரவில்லையா? என்று மன்னார் மாவட்ட மீனவர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு தமிழக மக்கள் வழங்கிய உதவி தொடர்பில், மன்னாரிலுள்ள தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் கட்டடத்தில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச செயலாளர் எஸ்.எம்.ஆலம் தெரிவிக்கையில்;

இலங்கை மக்கள் படும் துன்ப துயரங்களைப் பார்த்து தமிழக உறவுகள் வழங்கிய உதவிக்கு நன்றி. இதுவரை எந்தவொரு நாடுகளும், அமைப்புக்களும் எமக்கு அள்ளித் தராத பெரிய தொகையை தமிழக மக்கள் அனுப்பியுள்ளனர். இங்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் தங்களது கட்சி சார்ந்த அல்லது தாங்கள் சார்ந்த நிதி மக்களுக்காக வழங்க முன்வரவில்லை. இவர்கள் தேடிய சொத்துக்கள் அனைத்தும் மக்களால் கிடைத்தவையே.

மக்களுக்காக ஒரு ரூபாவைக்கூட வழங்க முடியவில்லை. தாங்கள் சுகபோகமான வாழ்க்கையை வாழ்கின்றனர். அன்றாடம் கூலி வேலை செய்யும் மக்கள் ஒருவேளை கஞ்சி குடிப்பதற்குக்கூட கஷ்டப்படுகின்றனர். எனவே வாக்களித்த மக்களுக்கு நன்றிக்கடன் உள்ளவர்களாக நினைத்தால் அவர்களுக்கு உதவவேண்டும் -என்றார். (க-213)

## பதுக்கப்பட்ட டீசல் வவுனியாவில் மீட்பு

வவுனியா, மே 26

சட்டவிரோதமாக வீட்டில் பதுக்கி வைக்கப்பட்ட 910 லீற்றர் டீசல் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டது.

வவுனியா, புளியங்குளம் - பழையவாடிப் பகுதியிலுள்ள வீட்டில் டீசல் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைத்த தவலுக்கமைய குறித்த வீட்டை முற்றுகையிட்டனர். இதன்போது அங்கு 910 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டதோடு சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூதூர் சிறுவர் அபிவிருத்தி நிலையமான றவ்ழத்துல் அத்பால் நிலையத்தின் சுற்று மதிலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ம-14)

# நெருக்கடிகளை எதிர்கொள்ள இலங்கைக்கு ஐ.நா. உதவும்

## ஹனா சிங்கர் உறுதி

**கொழும்பு, மே 26**
**இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள ஐக்கிய நாடுகள் சபை ஆதரவளித்து உதவிகளை வழங்கும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டி உறுதியளித்துள்ளார்.**



வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்ஹம்டிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பிலான ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பல பிரச்சினைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸால் பல கருத்துக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் ஒருங்கிணைப்பாளருக்கு முன்வைக்கப்பட்டன.

அதற்குப் பதிலளித்த ஒருங்கிணைப்பாளர், சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கும், அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும், வேலையின்மை மற்றும் போசாக்குக் குறைபாடு போன்ற பல பிரச்சினைகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபை முழுமையான ஆதரவை வழங்கும்.

அத்துடன் இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை பலதரப்பு முறையீடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் இலங்கை அரசாங்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபை தனது ஒத்துழைப்பைத் தொடரும் என்றும் ஹனா சிங்கர் உறுதியளித்தார் -என்றுள்ளது. (ஒ-14)



# கோத்தாபயவுக்கு எதிராக ஐ.நாவில் அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, மே 26
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரி ஜஸ்மின் சூகா 43 பக்கங்கள் கொண்ட அறிக்கையை நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையில் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 18 முன்னாள் இராணுவ அதிகாரிகளை அரச நிர்வாகத்துக்குள் நியமித்ததன்மூலம், அரச சேவையை இராணுவமயமாக்கியுள்ளார் என்று குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது விசாரணை அறிக்கை இது என்றும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-இ)

# மதுபானத்துக்கும் விரைவில் தட்டுப்பாடு



கொழும்பு, மே 26
மதுபான உற்பத்திக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட எதனோல் ஸ்பிரிட் இருப்பு முடிவடைந்துள்ளதால், எதிர்காலத்தில் மதுபான உற்பத்தி நிறுத்தப்படலாம் என்று கலால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வருடத்துக்கு 32 - 34 மில்லியன் லீற்றர் ஸ்பிரிட் மதுபானம் தயாரிக்கவும், 3 மில்லியன் லீற்றர் ஸ்பிரிட் மருந்துப் பொருள்களுக்கும் தேவைப்படுகின்றது.

அத்துடன் கரும்பு, கோதுமை தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு, எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளாலும் மதுபான உற்பத்திக்குத் தேவையான எதனோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## காலிமுகத்திடல் கலவரம்;

# சேதமாக்கப்பட்ட வாகனங்கள் குறித்து நீதிமன்றில் அறிக்கை

காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகை அருகில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற கலவரத்தில் சேதமாக்கப்பட்ட வாகனங்கள் குறித்த தகவல்கள் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கறுவாத்தோட்டம், நாரஹேன்பிட்டி, முல்லேரியா, பம்பலப்பிட்டி, பேலியகொட மற்றும் கிருலப்பனை ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்தே நீதிமன்றுக்கு தகவலறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதில் சேதமடைந்த வாகனங்களில் 17 பஸ்கள், 2 ஜீப்கள், 2 கார்கள், வான், அம்புலன்ஸ் மற்றும் 2 ஓட்டோக்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து 25 வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ச-இ)

# மத்திய வங்கி ஆளுநரை மாற்றுவதற்கு முனைப்பு

கொழும்பு, மே 26
மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவைப் பதவியிலிருந்து நீக்கி, முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியை நியமிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்த நிலையில், ஜனாதிபதியின் அழைப்பின் பேரில், அவுஸ்திரேலியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நந்தலால் வீரசிங்க, மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் நாட்டின் பொருளாதாரத்துக்கான தீர்வுகள் குறித்து அரசாங்கத்துக்கு எதிர்மறைவாக கருத்துக்களை வெளியிட்டுவருவதுடன், நெருக்கடி நிலைமையில் பதவி விலகுவதற்கும் திட்டமிட்டுள்ளார்.

அதனால் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியை மீண்டும் நியமிப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்திரஜித் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதற்காக, நியமிக்கப்பட்ட ஆலோசனைக்குழுவின் உறுப்பினராகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# சுகாதார ஊழியர்கள் இன்று வேலைநிறுத்தம்?



சுகாதாரத்துறை ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின், இன்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என்று துணை மருத்துவத் தொழிற்சங்கக் கூட்டுச் சம்மேளனம் எச்சரித்துள்ளது.

24 மணித்தியாலங்கள் சேவையை உறுதி செய்தல் உள்ளிட்ட தேவைகள் தொடர்பில், தொழிற்சங்கம் சுகாதார அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்துக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால், வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும். எனினும் அரசாங்கம் இதற்குச் சாதகமான பதிலை வழங்காது என்று சம்மேளனம் தெரிவித்துள்ளது. (க-இ)

# தூதுவர் பதவியை உதறினார் சஞ்சீவ்

ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் பதவியிலிருந்து சஞ்சீவ் குணசேகர விலகியுள்ளார். பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ளதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து கொள்வனவுக்காக 2 மில். டொலர் நன்கொடை

## இலங்கை கிரிக்கெட் சபை வழங்கவுள்ளது

கொழும்பு, மே 26
அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நாட்டின் சுகாதாரத்துறைக்கு உதவுவதற்காக இலங்கை கிரிக்கெட் சபை 2 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளது.
சீமாட்டி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு ஒரு மில்லியன் டொலரும், மஹரகம தேசிய புற்றுநோய் மருத்துவ மனைக்கு ஒரு மில்லியன் டொலருமே இவ்வாறு வழங்கப்படவுள்ளது. (ம)






# உடைமையில் கஞ்சா; 30,000 ரூபா தண்டம்

கொடிகாமம், மே 26
கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.
8 கிராம் கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் கடந்த 23ஆம் திகதி கச்சாய் பகுதியில் கைதுசெய்தனர்.
அவரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-159)

# மாடு திருட்டு; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 26
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சத்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான மாடு ஒன்று திருடப்பட்டுள்ளது என வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
சம்பவம் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சுழிபுரம்- குடாக்கனை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அத்துடன் திருடப்பட்ட மாடும் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
குறித்த சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# 20ஆவது திருத்தம் விரைந்து இரத்துச் செய்யப்படவேண்டும்

## சனத் வலியுறுத்து



கொழும்பு, மே 26
20ஆவது அரசமைப்புத் திருத்தம் விரைவில் இரத்துச் செய்யப்படவேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய வலியுறுத்தினார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
20ஆவது திருத்தத்தை நீக்குவதன் மூலம் அரசாங்கத்தின் நேர்மையை அறிந்துகொள்ள முடியும். புதிய அரசாங்கம் பதவியேற்று இரண்டு வாரங்கள் கடந்த போதிலும் உறுதியான திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. எங்கள் மக்கள் இன்னும் வரிசையில் நிற்கிறார்கள். அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். தயவு செய்து மக்களின் துன்பங்களை மறந்துவிடாதீர்கள் - என்றார். (ம)



# வயல் விழாவும் மஞ்சள் அறுவடையும்

யாழ்ப்பாணம்,மே 26
வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வயல் விழாவும் மஞ்சள் அறுவடையும் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாகாண விவசாயப் பணிமனையில் நேற்று இடம்பெற்றன.
மஞ்சள் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயப்பணிமனையால் செய்கை பண்ணப்பட்ட மஞ்சள் செடிகள் அறுவடை செய்யப்பட்டன. அறுவடை செய்யப்பட்ட மஞ்சளை எவ்வாறு பதப்படுத்தி தூளாக மாற்றுவது தொடர்பில் செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.
நிகழ்வில் வடமாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார், பிரதிப் பணிப்பாளர் அஞ்சலாதேவி ஸ்ரீரங்கன், மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சிவபாதசுந்தரம் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-20)



# கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 26
கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் அக்கரைப்பற்று சின்னமுகத்துவாரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதில் நபரொருவர் கோடரியால் தாக்கியதில் குறித்த நபர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் சின்ன முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபராவார்.
இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைதுசெய்ததோடு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்றுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,இ)

# விமான நிலையங்களுக்கு இம்மாத இறுதியில் பூட்டு

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு பின்னர் கட்டுநாயக்க விமான நிலையம் உட்பட அனைத்து விமான நிலையங்களும் மூடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
எரிபொருள் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்ற போதும், அதிகாரிகள் இதனை இது வரை உறுதிப்படுத்தவில்லை.
கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானங்களுக்குத் தேவையான எரிபொருள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மட்டுமே கையிருப்பில் உள்ளது என்று விமான நிலைய மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அதேவேளை இலங்கையில் தரையிறக்கப்பட்ட பல விமானங்கள் எரிபொருள் நிரப்புவதற்காக இந்தியாவின் சென்னைக்குத் திரும்பியுள்ளன என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-இ)

# கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் எரிகொட்டகைகளை அதிகரிக்குக

சாவகச்சேரி,மே 26
சாவகச்சேரி- கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் எரிகொட்டகைகளை அதிகரிக்க வேண்டும் என்று உறுப்பினர் க.தர்சன் கோரிக்கை விடுத்தார். சாவகச்சேரி நகரசபையின் [illegible] அவர் இந்தக் கோரிக்கையை [illegible] மயானத்தில் தற்போது மூன்று இடங்களில் தகனம் செய்யக்கூடிய இடங்கள் உள்ளன. இவை மிக அருகருகே காணப்படுவதால், ஒரே தடவையில் மூன்று சடலங்கள் தகனத்துக்குக் கொண்டு வரும்போது எரியூட்டல் வெப்[illegible] சிரமங்களை [illegible]றனர்.
இதனால் மேலும் எரிகொட்டகை அமைத்து குறைந்தது இரு கம்பிகள் நடுகை செய்ய வேண்டும் என்று உறுப்பினர் கோரிக்கை விடுத்தார். ஏனைய உறுப்பினர்களும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டனர். இதற்கு உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அரிசி கையிருப்பு செப்ரெம்பர் வரை மட்டுமே!

கொழும்பு, மே 26

நாட்டில் தற்போதுள்ள அரிசி கையிருப்பு செப்ரெம்பர் நடுப்பகுதிவரை மட்டுமே போதுமானது என, பிரதமரால் நியமிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகள் தொடர்பான குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்தக் குழு அண்மையில் கூடியபோதே மேற்குறிப்பிட்ட விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் மாதாந்த அரிசி தேவை 2 லட்சம் மெற்றிக் தொன் எனவும், தற்போதைய அரிசி கையிருப்பு செப்ரெம்பர் நடுப்பகுதிக்குள் தீர்ந்துவிடும் எனவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது. இதனால், டிசெம்பர் மாதம் வரையிலான அரிசி தேவையை நிவர்த்திசெய்ய வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும் என்றும் அந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

இரசாயன உரத்துக்குத் தடைவிதித்த ஜனாதிபதியின் தவறான முடிவால் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு விளைச்சல் குறைவடைந்து அரிசி தட்டுப்பாடு தலைவிரித்தாடுகின்றது. இதனால், வழக்கத்துக்கு மாறாக அரிசியை மிக அதிகமான தொகைக்கு மியான்மர் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் அவல நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளதுடன், அரிசி இறக்குமதியால் இலங்கையின் டொலர் கையிருப்பும் மிகையாகக் குறைந்து மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி தோற்றம் பெற்றுள்ளது. இந்தப் பின்னணியில் தற்போது மீண்டும் அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## கால்நடைப் பண்ணை கட்டுமானங்கள் விற்பனை

**கால்நடைப் பண்ணை ஒன்றின் கீழ்வருவன விற்பனைக்கு**

- 20' X 18' அடி அளவான அஸ்பெஸ்றற்ர் சீற் கூரையிலான அலுவலகம் - 01
- 30' X 24' அடி அளவான தகரக் கொட்டகை - 01
- 30' X 7' அடி அளவான பரண் கூடு - 01
- 4' X 10' அடி கம்பியிலான பரண் கூடு - 03
- இரும்பிலான நீர்த்தாங்கி நிறுத்தி மற்றும் பிளாஸ்ரிக் நீர்த்தாங்கிகள்

தொடர்பு: 077 844 8300

## வேலைவாய்ப்பு-Pharmacy

- அனுபவமுள்ள மருந்தக உதவியாளர்
- Accounts Trainee

தொடர்பு: 077 3877 072/077 0360 555

## தவறிவிட்டது

திருமதி ஜெபவானி-வேல்ராஜா என்பவரின் தேசிய அடையாள அட்டை இல:196055801340, 20.04.2022 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதில் குறித்த முகவரியில் தந்துதவும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தொடர்பு: 077 2951 194

## தோட்ட வேலைக்கு ஆள் தேவை

பளையில் இயங்கி வரும் தோட்டத்திற்கு வேலை செய்வதற்கு (தண்ணி இறைப்பதற்கு, மருந்து அடிப்பதற்கு) அனுபவம் உள்ள ஆண் வேலையாள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். தங்கி நின்று செய்வதற்கு. மாத சம்பளம் 45000- உணவு இலவசம். வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

077 911 6983

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 01 - 1947



மறைவு 25 - 05 - 2022

### திருமதி செல்வராஜா இராஜேஸ்வரி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராஜா இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (25.05.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் அன்னலட்சுமி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும், செல்வராஜா (ஓய்வு பெற்ற தாதி உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாவற்குழியைச் சேர்ந்த பொன்னம்பலம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், மகிந்தன், பிரகலாதன் (இலங்கை போக்குவரத்து சபை பரிசோதகர்), சஞ்சயன் (நீர்ப்பாசன திணைக்கள பட வரைஞர் முருங்கன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுசியா (ஆசிரியர்), கோமதி, குமுதினி ஆகியோரின் அன்பு மாமியும், டினோஜா (பேராதனை பல்கலைக்கழகம்), மலரவன், பிரியங்கா, மாதங்கி, ஐதுசனா, மதுரன், கஜாளினி, லக்ஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 06 - 1944



இறப்பு 24 - 05 - 2022

### திருமதி சிவபாக்கியம் துரைராஜசிங்கம் (தம்பிப்பிள்ளை)

பன்னாலை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் துரைராஜசிங்கம் 24.05.2022 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திருவருள் சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற துரைராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் பார்த்தீபன், அருளினி (லண்டன்), அஜந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கவிதா, சந்திரகாந்தன் (லண்டன்), அனோஜா ஆகியோரின் மாமியாரும் துலக்ஷனா, தினோஜன், துஷானா, அனோஜன், லக்ஷனா (லண்டன்), சதுஷனா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தெய்வநாயகி, பரமேஸ்வரி மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2022) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை

பார்த்தீபன் - 077 176 3624 (மகன்)
அருளினி - 00447478774440 (மகள் - லண்டன்)
அஜந்தன் - 0033782362397 (மகன் - பிரான்ஸ்)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரி (கேத்தரின்)



தோற்றம் 24.06.1953 | மறைவு 24.05.2022

நீராவியடியை பிறப்பிடமாகவும் அட்டகிரி வீதி, நவாலி வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (24.05.2022) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவதாசன் - கௌரி தம்பதியரின் அன்பு மகளும், சுரேஸ்குமார், சுகந்தினி, சதீஸ்குமார், ராஜ்குமார், விஜியகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், விவேகானந்தன், காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் செந்தில்வேல், காலஞ்சென்ற ஸ்ரீகணேசராசா மற்றும் மகேஸ்ரத்தினம், விஜியராணி, சிறிஸ்கந்தராஜா, மதியழகன், மதிவண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.05.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆராதனை நடைபெற்று, உடுவிலில் உள்ள மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சிவா - 077 947 3104
ராசன் - 077 042 4111
விஜியன் - 077 820 1861

(cs 44843) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திரு.செல்லத்துரை கனகலிங்கம்

தோற்றம் : 30.03.1955 | மறைவு : 25.05.2022



அரசடி வீதி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் இராஜவீதி, நீர்வேலி மேற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை கனகலிங்கம் அவர்கள் நேற்று (25.05.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா அன்ன லெட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், ரஞ்சினியின் பாசமிகு கணவரும், மயூதரி, சிந்துஜா (பிரான்ஸ்), தனோயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் குணசீலன் மற்றும் கதீஸ் (பிரான்ஸ்), சிவரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந், யதுஷா, பிரசாளினி, றெஸ்மிகன் ஆகியோரின் பேரனும், இந்திரகுமார், அமரர் ரவீந்திரகுமார் மற்றும் றஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரவதனா, தயாபரன், இராஜேஸ்வரி (பட்டு) விநாயகசுந்தரம், இராஜேஸ்வரன், ஜெயரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராஜ வீதி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 18737) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 • 09 • 1943

மறைவு 05 • 06 • 2021



### அமரர் திரு. சின்னத்தம்பி இராசரத்தினம்

(மாதகலைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும்
கொண்டவரும், மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்
முன்னாள் பொது முகாமையாளரும்,
யாழ் / மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின்
ஓய்வுபெற்ற ஆசிரியருமாவார்)

**திதி: 26.05.2022**

தங்கத்தின் மூத்த புதல்வனாகத்
தரணியில் வந்துதித்த இரத்தினமே.....
தர்மத்தின் காவலனாயும், தலைமைத்துவத்தில் சிறந்தவனாயும்
தரணிக்கல்வி புகட்டிய ஆசானே.....
நம் குடும்பங்களின் குத்து விளக்கானவரே
நம் தீபமணைந்து ஓராண்டும் வந்ததய்யா - ஆனால்
நம் நெஞ்சிலிருந்து என்றென்றுமே
நீங்காது உங்கள் அழகிய நினைவலைகள்...

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!**

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்
**021 221 1886, 021 205 2832**

(cs.44826) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 • 06 • 1952

விண்ணில் 07 • 05 • 2021



அமரர்

### கந்தையா இந்திராணி (தேவி)

ஓராண்டு ஓடிற்றோ
உமை இவ்வுலகில் நாமிழந்து
வையகத்தை விட்டு நீர் நீங்கிப் போனாலும்
நீங்காமல் உம் நினைவு
எம்மோடு நிறைந்திருக்கும் அம்மா.

உம் உதிரத்தால் எமக்குள்
உம்மை சுமக்கின்றோம்
உடலை பிரிந்தோமே
தவிர உம்மையல்ல

பொன்னோடு பொருள் சேர்த்து
பெரு வாழ்வு வாழ்ந்தாலும்
அம்மாவின் நிழலின் கீழ்
வாழ்கின்ற வரம் வருமோ!!

என்ன செய்வது எம் மனம் ஏங்குகிறது!
அழுத விழிகளுக்கு ஆறுதல் காட்ட
ஒரு முறையாவது வாங்க
அம்மா உங்கள் முகம் காண...

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

செல்வா வீதி,
கைதடி வடக்கு,
கைதடி.

குடும்பத்தினர்
**077 273 4277**

(cs.882) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 • 04 • 1935

இறப்பு 24 • 05 • 2022



### தம்பிஐயா அருளம்மா

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா அருளம்மா 24.05.2022 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை தெய்வானப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிஐயா இன் பாசமிகு மனைவியும் செபஸ்ரியாம்பிள்ளை தனபாலசிங்கம் (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), சாந்தகுமாரி (லண்டன்) காலஞ்சென்றவர்களான சசீந்திரன் (பனா), றஞ்சினி, சரோஜாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும் இராசநாயகம் (மசு தங்கக உரிமையாளர்), காலஞ்சென்ற தெய்வேந்திரம் (முன்னாள் கமநல சேவை சாரதியும் இலங்கை செஞ்சிலுவை சங்க சாரதி), மாகலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற சிரோன்மணி, நிர்மலா (சுவிஸ்), நளாயினி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் தயாநிதி (தயா), தயாளினி (தங்கா), தயாகரன் (ஜேர்மனி), சீலன்(கனடா), மயூரன்(கனடா), மதி(பிரான்ஸ்), ராகினி, தர்சினி, அர்ஜின் (சுவிஸ்), அயரா(சுவிஸ்), மேனா(அனர்த்த முகாமைத்துவ உத்தியோகஸ்தர் மாவட்ட செயலகம்), ரஜிதா (லண்டன்), கனிதா (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் கரைச்சி), சோபனன், மசுதனன் ஆகியோரின் பேர்த்தியும் முத்தம்மா (ஆனந்தபுரம்), காலஞ்சென்றவர்களான மனோன்மணி, மயில்வாகனம், சின்னம்மா ஆகியோரின் சகோதரியும் புவிதன், கவிதன், பவித்திரா, கீர்த்திகா, யதுர்சன் (கனடா), நிதர்ஷனா, கிருஷனா, கிருஷன், கிசாயினா (ஜேர்மன்), கிருஷாயா (ஜேர்மன்), அஸ்விகா (UK), காசிக்கா (UK), சாரா, ஆதவ், ஹரி (கனடா), யதுஸ், அக்ஸை (கனடா), தர்சித் (கனடா), அகிஸ்ணவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2022) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவருடைய இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக திருநகர் இந்து பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் [illegible] கேட்டுக்கொள்கின்றோம்.

**புகையிரத நிலைய வீதி,
கிளிநொச்சி**

தகவல்:
**குடும்பத்தினர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 • 08 • 1935

ஐயனார் அடியில் 05 • 06 • 2021



### அமரர் பொன்னையா குமாரசாமி

**(முன்னாள் வர்த்தகர் விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் – மன்னார்)**

**திதி: வைகாசி மாத தேய்பிறை ஏகாதசி (26.05.2022)**

பறந்து போனதே ஓராண்டு
மறக்கமுடியாதே உங்கள் நினைவுகள்....
காணாமல் தேடுகின்ற கண்கள் .....
பரிதவிக்கும் பாசம் மிகுந்த நெஞ்சங்கள்....
பிரிவினை ஏற்க மறுக்கும் மனங்கள்.....
அழுகின்றதே ஊமையாக உள்ளங்கள்.....
நாம் வாழும் காலம் வரை - உங்கள்
நினைவுகளை சுமந்து வாழ்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

தொக்குவில்

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்**

(CS 44844) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தின்...

கிலோ பால்மாவும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இன்று அல்லது நாளை இவை யாழ்ப்பாணத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதேச செயலகங்கள் ஊடாக அவை விநியோகிக்கப்படவுள்ளன. (அ-ஒ-5-26)

## உலக...

இலங்கைக்கு புதிய கடன் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு உலக வங்கி தயாராகின்றது என்று அண்மைக்காலமாக தகவல்கள் வெளியான நிலையில், உலக வங்கி அறிக்கை ஒன்றின் மூலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இலங்கை மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளோம் என்று தெரிவித்துள்ள உலக வங்கி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பரந்தளவிலான வளர்ச்சியை மீட்டெடுப்பதற்குப் பொருத்தமான கொள்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற அபிவிருத்தி பங்காளிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுவோம் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சில நிதித் திட்டங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள உலக வங்கி, இலங்கைக்கு அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதற்கும், ஏழைகள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகர்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

உறுதியான பொருளாதாரக் கொள்கை ஒன்றை நிறைவேற்றும்வரையில் இலங்கைக்குப் புதிய கடன்கள் எதுவும் வழங்கப்படாது என்று தெரிவித்துள்ள உலக வங்கி, ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட திட்டங்களே மீளத் தயார்படுத்தப்படுகின்றன என்று தெரிவித்துள்ளது.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், புதிய அரசாங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பதவியேற்றுள்ளது. அதன்பின்னர் வெளிநாடுகள் மற்றும் அமைப்புக்களின் நிதி உதவிகள் தொடர்பான பல்வேறு தகவல்கள் வெளியாகிய வண்ணமுள்ளன. எனினும் இதுவரை எந்தவிதமான நிதி உதவியும் இலங்கைக்குக் கிடைக்கவில்லை. தொடர்ந்தும் டொலர் மற்றும் ரூபா பற்றாக்குறையால் இலங்கை அரசாங்கம் திணறி வருகின்றது. (அ-எ-இ)

## நெருக்கடி...

செயலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

**மண்ணெண்ணெய் தட்டுப்பாடு**

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு கடந்த இரு வாரங்களால் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவில்லை. இதனால் கடற்றொழிலாளர்களும், விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்பில் உரிய தரப்புகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

மண்ணெண்ணெய் கிடைத்த பின்னர் விவசாயிகள், கடற்றொழிலாளர்களுக்கு பங்கீட்டு அட்டை மூலம், மீனவ சங்கங்களின் பரிந்துரையுடன் பகிர்ந்தளிக்கப்படும்.

**5,000 ரூபா உதவி**

வருமானம் குறைந்த மக்களுக்குத் தற்போது வழங்கப்படும் தொகையை விடவும், மேலதிகமாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 78 ஆயிரத்து 442 சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கும், 27 ஆயிரத்து 978 வறிய குடும்பங்களுக்குமாக ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 420 குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்படும். நிதி கிடைத்தவுடன் மே மற்றும் ஜூன் மாதங்களில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் - என்றார். (அ-எ-26-20)

## 18 நாள்களில்...

செயலர் க.மகேசன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் 8 லட்சத்து 81 ஆயிரத்து 100 லீற்றர் டீசலும், 4 லட்சத்து 48 ஆயிரத்து 800 லீற்றர் மண்ணெண்ணெயும், ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 400 லீற்றர் சுப்பர் டீசலும் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஒக்ரேன் 95 ரகப் பெற்றோல் இந்தக் காலப் பகுதியில் விநியோகிக்கப்படவில்லை.

கடந்த 14ஆம் திகதி பெற்றோல் அதிகபட்சமான ஒரேநாளில் 2 லட்சத்து 11 ஆயிரத்து 200 லீற்றர் விநியோகிக்கப்பட்டுள்ளது. கடந்த 20ஆம் திகதி ஒரு லட்சத்து 65 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்தார். (எ-26)

## பட்டும்...

பினராகப் பதவி வகிப்பது தடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படும் நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ச இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்பதால் அவரது பதவி பறிபோகும் நிலைமை ஏற்படும் என்பதாலேயே 21ஆவது அரமைப்புத் திருத்தத்துக்கு பொதுஜன பெரமுனவில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், 21ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைப் பின்னகர்த்தும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

முதலில், நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சாலையில் சுதந்திரமாக நடக்கவும், சிந்திக்கும் மனச்சுதந்திரத்தைப் பெறவும் உதவும் சூழலை உருவாக்குங்கள். அதன்பின்னர் அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஆலோசிக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். பஸில் ராஜபக்சவைக் காப்பாற்ற பொதுஜன பெரமுன முயல்வதால், 21ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. பொதுஜன பெரமுனவின் இந்த நிலைப்பாட்டால் நாட்டின் நெருக்கடி நிலைமை மேலும் அதிகரிக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-எ-இ)

## அத்தியாவசியப்...

யாக வழங்குவதற்கு ஏதுவாக, அத்தியாவசிய ஊழியர்களை மட்டும் இன்று முதல் சேவைக்கு அழைக்க வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் அறி[illegible] டும்வரை, குறை[illegible] உத்தியோகத்தர்களை மட்டும் சேவைக்கு அழைப்பதற்குப் பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த நடவடிக்கை அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## எரிபொருள்...

ரம் லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

பெற்றோல் நிலையங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்கப்படும் எரிபொருளை சேகரித்து பல்வேறு நபர்கள் அதிக விலைக்கு விற்கின்றனர் என்று கிடைத்த முறைப்பாட்டை அடுத்து இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

எரிபொருளை மோசடி செய்து அதிக விலைக்கு விற்பது தொடர்பாக பொதுமக்களுக்குத் தகவல் தெரிந்தால் 118 - 119 மற்றும் 1997 ஆகிய எண்களுக்கு அறிவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## பெண் குரலில்...

இளைஞர் ஒருவரே யாழ்ப்பாணம் மாவட்டப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த இளைஞர் நான்குக்கும் மேற்பட்ட நபர்களிடம் லட்சக்கணக்கில் பணம் பறித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வந்த கைபேசி அழைப்பில் பெண் ஒருவர் உரையாடியுள்ளார். அதன்பின்னர் அவர்கள் தொடர்ச்சியாக உரையாடியுள்ளனர். பின்னர் அவர்கள் அந்தரங்கப் படங்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அதன்பின்னர் கைபேசியில் பேசிய பெண், அந்த நபரை மிரட்டி ஒன்றரை லட்சம் ரூபா பறித்துள்ளார். அதன்பின்னரும் மிரட்டி ஒரு லட்சம் ரூபா கேட்டுள்ளார். அதில் சந்தேகமடைந்த அந்த நபர், இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கைபேசியில் பேசிய பெண்ணிடம், வங்கியில் பணம் வைப்புச் செய்ய முடியாது என்றும், நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் பணத்தைப் பெற்றுக்கொள்ள வந்த 26 வயது இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணையில் அந்த இளைஞரே பெண் குரலில் பேசி ஏமாற்றியமை தெரியவந்துள்ளது. இந்த இளைஞர் ஏற்கனவே நால்வரிடம் இவ்வாறு பேசி நான்கு லட்சம் ரூபாவுக்கும் மேல் பறித்துள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் இருந்து நான்கு கைபேசிகளும், ஒரு லட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## "காஞ்சனவின்...

ஆரம்பித்துள்ளனர்.

"கஞ்சனவின் உண்டியல்" என பெயர் பொறிக்கப்பட்ட உண்டியல் ஒன்றை எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கிய அவர்கள், நஷ்டம் ஏற்படுகின்ற ஒரு [illegible]லில் போட வேண்டும் [illegible]டம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கடனாளிகளாக விரும்பாதவர்கள் எரிபொருளை நிரப்பிக்கொண்டதன் பின்னர் ஒரு ரூபாவை உண்டியலில் போட்டுவிட்டுச் செல்லுங்கள் என்று அவர் கூறுகின்றனர்.

சேகரிக்கும் பணம் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு காசுக் கட்டளை ஊடாக அநுராதபுரம் தபாலகத்தில் இருந்து அனுப்பப்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## குடும்ப...

தேவையான மக்களை தமது முகவர்களிடம் பதிவு செய்ய அறிவுறுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட எரிவாயு விநியோகத்தின்போது பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன. எரிவாயு மாபியாக்களால், மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் பல்வேறு அழுத்தங்களை அடுத்து எரிவாயு விநியோகத்தைச் சீராக்குவதற்கு மாவட்டச் செயலகம் தலையீடு செய்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எரிவாயு முகவர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களது பகுதிகளைச் சேர்ந்த கிராம அலுவலர் பிரிவுகள் ஒதுக்கப்படும். அந்த கிராம அலுவலர் பிரிவுகளில் எரிவாயு தேவையான மக்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட முகவரிடம் குடும்ப அட்டையுடன் சென்று பதிவுகளை மேற்கொள்ளவேண்டும். பதிவுகளின் அடிப்படையில் எரிவாயுத் தேவையை கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் இணைந்து கண்காணிப்புச் செய்வார்கள். எரிவாயுத் தேவை உறுதிப்பட்டவர்களின் விவரங்கள் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பப்படும்.

அதன் பின்னர் மாவட்டத்துக்கு கிடைக்கப்பெறும் எரிவாயு எண்ணிக்கைக்கு ஏற்ப, பிரதேச செயலர் பிரிவுகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அவற்றுக்கு எரிவாயு சிலிண்டர்கள் ஒதுக்கப்படும். பின்னர் பிரதேச செயலர்கள் தமது பிரிவுக்கு எத்தனை முகவர்களுக்கு எவ்வளவு சிலிண்டர்கள் ஒதுக்கவேண்டும் என்பதை மக்கள் முன்னுரிமையின் அடிப்படையில் தீர்மானிப்பார்கள். அதற்கு அமைவாக முகவர்கள் ஊடாக மக்களுக்கு விநியோகம் இடம்பெறும். இந்த விநியோக நடவடிக்கையில் குடும்ப அட்டையில் பதிவுகளை மேற்கொள்ளும் செயற்பாட்டில் அபிவிருத்தி அலுவலர்கள் நேரடியாக ஈடுபடுத்தப்படுவார்கள். எரிவாயு தேவையான சகலருக்கும் இந்தப் பொறிமுறை ஊடாக சிலிண்டர்களை வழங்க முடியும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை கணினி மயப்படுத்தவும் மாவட்டச் செயலகம் தீர்மானித்துள்ளது. (அ-ஒ-5)

## தீவக...

யாழ்ப்பாண மாவட்டத்தில் 45 ஆயிரத்து 771 படகுகள் மண்ணெண்ணெயில் இயங்குகின்றன. 420 படகுகள் டீசலில் இயங்குகின்றன. இவற்றில் மேற்படி 4 தீவுகளையும் சேர்ந்த 705பேருக்கே இந்தியாவின் மானியமாக வழங்கப்படும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது. இந்த விநியோகம் இன்னும் ஒரு வாரத்துக்குள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - மேற்படி தீவுகளில் புதுப்பிக்கதக்க சக்தி மூலமான மின்உற்பத்தியை சீனா மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த நிலையில் அது இரத்துச் செய்யப்பட்டு இந்தியா அங்கு மின் உற்பத்தியை ஆரம்பிக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்கு உதவ சகலரும் ஒன்றுபடவேண்டும்

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 26

'அனைத்து மலையகக் கட்சிகளும் ஒன்றிணைந்து, மலையக மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் மற்றும் உதவி கள் பாரபட்சமின்றிக் கிடைப்பதற்குரிய முறைமை ஒன்றை முன்வைக்க வேண்டும்' என கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை பஞ்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து மக்களும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக குறை வருமானம் பெறுபவர்கள் தமது உணவுத் தேவையைக்கூடப் பூர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் விசேட நிவாரணங்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் இத்தகைய நிவாரணங்களை வழங்கும்போது, மலையக மக்களுக்குப் பாராபட்சம் காட்டப்பட்டது. இந்த நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கு அனைத்து மலையக கட்சிகளும் ஒன்றிணைந்து, மலையக மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் மற்றும் உதவி கள் பாரபட்சமின்றிக் கிடைப்பதற்குரிய முறைமை ஒன்றை முன்வைக்கவேண்டும்.

இந்திய அரசிடம் இருந்தும், குறிப்பாக தமிழ்நாட்டில் இருந்தும், இரண்டு பில்லியன் பெறுமதியான நிவாரண பொருள்கள் கிடைத்துள்ளன. எமது நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைக்கு உதவும் விதமாக தமிழ் நாட்டு அரசே முன்வந்து இந்த நிவாரணப் பொருள்களைப் பெற்றுத்தந்துள்ளது. இதனைவைத்து, குறுகிய அரசியல் வட்டத்துக்குள் வாத விவாதம் செய்துகொள்வது இந்நேரத்தில் பொருத்தமானது அல்ல.

மக்கள் எதிர்நோக்கியுள்ள பெரும் பிரச்சினைகளுக்கு மத்தியில் சிறுபிள்ளைத்தனமான அரசியல் செயற்பாடுகள் மக்களுக்கு மேலும் கோபத்தைத் தூண்டு வதாகவே உள்ளது. சூழ்நிலையைப் புரிந்துகொண்டு மக்களுக்கான நிவாரணங்கள் பாரபட்சமின்றிக் கிடைப்பதற்குரிய வழிமுறையை ஏற்படுத்துவதே எமது கடப்பாடாகும் - என்றார். (ம)

## மாணவர்களின் அங்காடி விழா

கிளிநொச்சி, மே 26

கனகபுரம் - றோயல் முன்பள்ளி மாணவர்களின் அங்காடி விழா அண்மையில் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.

கொடுக்கல், வாங்கல் செயற்பாட்டை மழலைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் நோக்குடன் இந்த விழா முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் முன்பள்ளி வளாகத்தை அழகுபடுத்தும் நோக்குடன் பெற்றோரால் ஆக்கப்பட்ட பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டன. நிகழ்வில் விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப் பணிமனையின் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் நா.யுவராஜ் கலந்து கொண்டார். (ம-14-214)





வவுனியா சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்த பொதுச் சபைக்கூட்டமும் பணியாளர்கள் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சமாசத்தின் தலைவராக மீண்டும் க.புவனேந்திரராசா தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் சமாசத்தில் நிலையான வைப்புக் கணக்கில் அதிக தொகையை வைப்பிலிட்ட மூன்று சிக்கன கடனுதவி சங்கங்களுக்கு நினைவுமடல் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் சமாசத்தில் 25 வருடங்களாகக் கடமையாற்றிய நான்கு பணியாளர்களும் பணியாளர்களின் புலமைப்பரிசிலில் சித்தியடைந்த பிள்ளைகளும் கௌரவிக்கப்பட்டனர். (ஓ-14)



தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு ஒரு தொகுதி மருந்துப்பொருள்கள் சிவபூமி அறக்கட்டளையால் நேற்று கையளிக்கப்பட்டன.

சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அறங்காவலர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் குறித்த மருந்துப் பொருள்கள் அடங்கிய பொதியை புற்றுநோய் மருத்துவ நிபுணர் கிருஷாந்தி ராஜசூரியரிடம் கையளித்தார். (ஓ-14,125)

திருமாங்கல்யம் திருமண சேவை
1980, உள்நாட்டு மணமகன்,1993,NRC மணமகன், 1990, உள்நாட்டு மணமகன், 1980, கடனா மணமகன் இது போன்ற மணமக்கள் எம்மிடம் உள்ளனர்.
thirumaangalyam.com
077 120 4651, 021 728 4433

பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.
074 110 0639
(CS 44546)(2/6)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக் காணிவிற்பனைக்கு.
✓ 1 1/2. 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
✓ கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
✓ சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
✓ கைதடி சந்தி 200 M தூரம்
✓ வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
✓ மூன்று வழி பாதையுடன்
01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
03- சமுர்த்தி வங்கி அருகாமை 100 M தூரம் (16 அடி பாதையுடன்)
✓ சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
✓ செம்மண் காணி.
தொடர்பு: 077 6234 204
077 2880 152
076 6583 621
(CS 1014) 1/6

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு
நிலப்பரப்பு
❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
❖ A9 வீதியுடன் 6 பரப்பும்.
❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
❖ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
❖ மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
❖ அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389, 077 241 7589

விற்பனையாளர் (ஆண்/பெண்) தேவை
விற்பனையாளர் (ஆண் / பெண்) தேவை.
ஊரேழு கிழக்கு மற்றும் அச்சுவேலியில் உள்ள எங்களின் புதிய Foodcity கிளைகளுக்கு அனுபவம் வாய்ந்த விற்பனையாளர்கள் தேவை.
கணக்காளர் (ஆண் / பெண்) தேவை. (பகுதி நேரம்)
யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனத்திற்கு அனுபவமுள்ள தகுதியான கணக்காளர் தேவை.
மின் வணிக நிர்வாகி (ஆண் / பெண்) தேவை (பகுதி நேரம்)
இ-காமர்ஸ் நிர்வாகம் மற்றும் சமூக ஊடகங்கள், யூடியூப், கிராபிக்ஸ் ஆகியவற்றில் அறிவும் சில வருட அனுபவமும் கொண்ட பணியாளர் யாழ்ப்பாணத்தில் தேவை.
உங்கள் விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலம் அனுப்பவும்
info@ourfarmers.lk அல்லது
W.app - 076 287 8655
(CS 1005) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.